Sicul i,orum,*m.pl.Siciliens*, சிசிலியதீவார்;Siculè,*adv. En Sicilien*, ஷெதீவார்மேரை-பாஷையாய்; Sicul us, a, um.*De Sicile*, சிசிலியதீவின்:— pastor, *Théocrite* என்னும்புலவன்,—tyrannus, *Phalaris* என்பவன்,— juvencus இவன் செய்வித்தவெங்கலக்காளை,— vertex, *Etna* என்னுமலை,—pirata,*Pompée* என்பவன்,—conjux, *Proserpine* என்பவள்,—virgo மையற்காரி.

Sicundè, *adv. Si de quelque part*, யாதோரிடத்தினின்று...ஆகில்: sicundè venerit எவ்விடத்தினின்றுவந்தாலும்.

Sicut,—ti, *adv. Comme*, போலே, போல்,என.‖—*si*,ஆம்போல்:— diceres நீசொன்னாற்போல்.‖ *A mesure que*, அளவாக.

Sicyon,is,*f.Sicyone, Basilico*, (*Péloponèse*) நகர்; Sicyoni us, a, um. *De Sicyone*, ஷெநகரத்து; Sicyoni a, *n.*—ni i,*m.*—orum, *pl. Chaussure de Sicyone*, ஷெநகரத்து ஸதிரீசப்பாதத்து; Sicyoni a,æ,*f.Sicyonie*,ஷெநகராடு.

Sid a,æ,*f. Candéloro*, (*Pamphylie*); *Side*, (*Laconie*) நகர்.

Sid e,es,*f.Grenadier*,மாதளை.

Siden s,tis,*part.ex* sido.

Siden us,i,*m.Sidène*,(*Pont*)சிறுநதி.

Sideral is,is,e.*Sidéral*,இரகத்து,இரகங்களுக்கடுத்த:—difficultas இரகசாஸ்திரத்தின்ருமை.

Sideratio,nis,*f.Maladie des arbres*, அக்கினிநகூத்திரத்தாற் நிலமரஞ்செடிகளுக்குவருநோய்.‖*Horoscope*,சாதகம்; நகூத்திரகணிதம்,-நோக்கம்.

Sideratiti us,—rat us,a,um.*Desséché*,காய்ந்த,வறண்ட.

Sidere us,a,um. *Des astres*, இரகத்து, நகூத்திரத்து:— canis அக்கினி நகூத்திரம்,— æstus வெயிலுக்கிரம்,— dea சந்திரன்.‖*Céleste*,வான,பரம, திவ்விய,தெய்வ:—orbes இரகம்போலப்பிரகாசிக்குங்கண்கள்,—artes தெய்வகாரியப்படிப்பு.

Sideri on,i,*n. Esp. de plante*, காயங் கருக்கு அவஸ்தமான பூண்டி.

Sideris,*gen. ex* sidus.

Siderit es,æ,*m. V.* Magnes. ‖ *Esp. de diamant*, ஓர் விதவைரமணி.

Sideretes is,is,*f. V.* Helioscopius.

Sideriti s,dis,*f. V.* Helxine.

Sideropœcil us,i,*m. Esp. de pierre*, மறுவுள்ள இருப்புநிறக்கல்.

Sider or...ari,*v. p. Etre étiolé, bruiné*, நோய்பட்டுமெலிதல், உறைந்தபனியாற்-, புஞ்சிறுற்கெடுதல்,-அழிதல்.

Sidicin us, a, um. *De Sidicium, (Campanie)*, சிதிசியோம்நகரத்து.

Sid o,is,i,*vel* (sedi),ere,*v. n. Se percher*, தொற்றுதல், படிதல். ‖ *S'abattre*, தாழுதல், இறங்குதல், பதிதல். ‖ *S'accroupir*, குத்துதல். ‖ *Aller à fond*, அமிழ்ந்துதல், முழுகிப்போதல், அடியிலிறங்குதல். ‖ *Toucher*, மோதுதல், தட்டுதல், தலையில்-, அடியிற்படுதல். ‖ *S'écrouler*, இடிதல், விழுதல். ‖ *Se dissiper*, தெளிதல், அழிதல்.

Sidoleuc um,i,*n. Saulieu, (France)*, நகர்.

Sidon,is, *f. Sidon, (Phénicie)* நகர்; Sidonic us,—ni us,a,um,—ni s,dis, *f. De Sidon*, ஷைநகரத்து. ‖ *V.* Tyrius:—hospes, *Cadmus* என்பவன்.

Sid us,eris,*n. Constellation*, தாராகணம், இராசி. ‖ *Astre*, நக்ஷத்திரம், தாரகை, விண்மீன், பஞ்சிதம். ‖ இரகம், தாரா: sidera இராத்திரி, sideribus dubiis இரண்டுங்கெட்டநேரத்தில். ‖ *Saison*, பருவம். ‖ *Climat*, தேசகுணம், வானசாய்வு. ‖ *Influence des astres*, இரகங்களின் தர்ப்பலாபலன். ‖ *Lustre*, அலங்காரம், காந்தி, மகிமை. ‖ நேசச்சொல்லுமாம்: sidera terrestria புஷபங்கள்.

Si em,es, et,nt,*P.* Si m,s,t,nt.

*Sifil o,as,are,*V.* Sibilo.

Sig a,æ,*f. Siga, Ned-Roma, (Maroc)* நகர்.

Sigaleon,tis, *m. Sigaléon* என்பவன், மவுரத்தின்பொய்த்தேவன்.

Sige um,—gæ um,i,*n. Sigée, Incihisari, (Troade)* முத்தல்; Si gei us,—ge us,—gæ us,a,um. *De Sigée*, ஷைமுத்தலின். ‖ *V.* Romanus.

Sigillari a,um,*n. pl. Sigillaries*, சத்துர்னென்பவன் திருநாளுக்குக்கூட்டிய-உ-நாள். ‖ *Figures des sigillaries*, ஷைதிருநாட்சந்திப்பானசிறுசிலைகள். ‖ *Rues où on les vendait*, ஷைசிலைகளைவிற்கும்வீதிகள்; Sigillari us,—liari us,i,*m. Qui en fait*, ஷைசிலைகளைச்செய்பவன்.

Sigillar is,is,e. *De ces figures*, ஷைசிலைகளின். ‖ *De cachet*, முத்திரையின். ‖ *V.* Signatorius.

Sigillariti us,a,um. *Des présens des sigillaries*, சத்துர்னென்பவன் திருநாட்சந்திப்புகளின். ‖ *V.* Signatorius.

Sigillatim,*adv. V.* Seorsé.

Sigillatio,nis,*f. Act. de sceller*, முத்திரையிடுதல்.

Sigillator, is, *m. Faiseur de petites figures*, சின்னசிலைகளைச்செய்பவன். ‖ *V.* Persignator.

Sigilliari us,—lari us, i, *m. ex* sigillaria.

Sigilliol um,i,*n. Petite statue*, சின்னசிலை,-விக்கிரகம்,-உருவம்.

Sigill o...are,*v. a. Tailler en relief*, கொத்துதல், கொத்துவேலையாய்-, சின்னசிலைகளை-உருவங்களைச்செய்தல்,-சித்திரித்தல்,- சின்னசுரூபங்களாலலங்கரித்தல். ‖ *V.* Exsigno.

Sigill um,i,*n. Petite figure*, கொத்துவேலையாயசின்ன சிலை,- சுரூபம். ‖ *Sceau*, முத்திரை, பொறி. [முத்தல்.

Sigi um,i,*n. Cette, (France)*, நகர்,

Sigli a,orum,*n. pl. Abréviations*, சுருக்கம, சுருக்கக்குறிப்புகள்.

Sigma,tis,*n. Sigma*, கிரேக்குபாஷையில்-ச-என்னுமக்ஷரம். ‖ *Esp. de lit de table*, அரைவட்டமானமேசைக்கட்டில்.

Sigman us,i,*m. Leyre, (France)* நதி.

Sigmoid es,um, *f. pl. Valvules du cœur*, இருதயத்தைச்சேர்ந்தமுவ்வடைப்புச்சவ்வு. ‖ *Sigmoïde*, குரல்வளையின்வளைவானசவ்வு.

Sigmoid es, is, *o. g. De la forme d'un sigma*, அரைவட்டவடிவுள்ள.

Signacul um,i,*n. Sceau*, முத்திரை. ‖ *Signe*, குறிப்பு, அடையாளம்:—corporis விருத்தச்சேதனம்,—frontis சிலுவையடையாளம்.

Signanter,*adv. D'une manière distinctive*, விசேஷவிதமாய்.

Signari us,i,*m. V.* Statuarius, Vexillarius

Signatè,*adv. V.* Distinctè.

Signatio,nis,*f. Désignation*, குறிப்பு, நியமிப்பு. ‖ *Signe de croix*, சிலுவையடையாளம்.

Signator,is,*m.Témoin*, சாட்சி, கையொப்பமிடுஞ்சாட்சிக்காரன்‖*Qui scelle*, முத்திரையிடுகிறவன்.‖*Graveur*,கொத்துவேலைக்காரன்,சித்திரகன்.‖ *V.* Monetarius. [திரையிடுதற்குரிய,-ஏற்ற.

Signatori us,a,um.*A cacheter*, முத்

Signatur a,æ,*f.V.*Sigillatio.‖ *Scel*, முத்திரை.‖*Griffe*, ஒப்பம, ஒப்பக்குறி.‖ *Signature*,கையொப்பம்,-யெழுத்து.

Signat us,a,um, *part. ex* signo.‖ *Marqué*,குறிப்புள்ள:—limina நன்றாய்ச்சாத்தப்பட்டகதவு.

Signi a,æ,*f.Ségni*,(*Italie*) நகர்.

*Signif acio,acis,eci, actum, acere, *v.a.V.*Significo.

Signifer,i,*m.Chef*, தலைவன்.‖ *Zodiaque*,இராசிமண்டலம்.‖ *V.* Vexillarius.

Signifer,a, um. *Qui porte des signes*, குறி-,குறிப்பு-, இராசிகளுள்ள: — orbis,circulus, polus இராசிமண்டலம், —cœlum நகூத்திரங்களுள்ளவானம்.‖*Ciselé*,கொத்துவேலையான.‖*V.* Vexil-

Signif ex,icis,*m.V.*Sculptor. [lifer.

Significabil is, is,e.*Significatif*, குறிப்பான,தெளிவு-, அழுத்தம்-,திட்டமான, தெளிவாய்க்காட்டுகிற, வெளிப்படையான. [*V.*Significabilis.

Significan s,tis,*part.ex* significo.‖

Significanter,*adv. Energiquement*, ஊக்கம்-, அழுத்தம்-,வெளிப்படை-,தெளிவாய்.[ர்த்தம்,பயன்,பொருள்,கருத்து.

Significanti a,æ,*f.Signification*, அ

Significatio,nis,*f.V.*Significantia.‖*Indice*, அடையாளம்,குறி,குறிப்பு, அத்தாட்சி.‖*Avertissement*, எச்சரிப்பு, அறிவிப்பு.‖*Déclaration*,வெளி-, பிரசித்தப்படுத்துகை,கூறல், அறிக்கை.

Significativ us,—tori us,a,um, *V.* Significabilis.

Significat us,ûs, *m. Indice*, அடையாளம்,குறி,குறிப்பு.‖*V.* Significantia.

Signific o...are,*v.a.Signifier*, அறிவித்தல், எச்சரித்தல், தெரியப்படுத்துதல்,சைசக்கினைபண்ணுதல்.‖குறித்தல், குறிப்பு-,அடையாளமாயிருத்தல். ‖ அர்த்தமாதல், அர்த்தம்-, பயன்கொள்ளுதல்,-கொடுத்தல்.

Signific us,i,*m. V.* Sculptor.

Signin um,i, *n.Mortier*, அரைத்தசெங்கல்லுஞ்சுண்ணம்புங்கலந்தசாந்து.‖*Soute*,மற்றோர்விதசாந்து.

Signin us,a, um.*De Signia*, சிகினியநகரத்து:— opus ஷைகலப்புச்சாந்துவேலை.

Signitenen s,tis,*o.g.Orné d'étoiles*, நகூத்திரங்களால் சிறப்பிக்கப்பட்ட.

Sign o...are,*v.a. Marquer*, குறித்தல்,குறிபோடுதல், குறிப்பிடுதல். ‖ *Empreindre*,பதித்தல், அச்சடித்தல்.‖ *Graver*,கொத்துதல்.‖*Peindre*,சித்திரித்தல், எழுதுதல்: — ceram figuris மெழுகிலுருவங்களாப்பதித்தல், — humum certo pede திடமுள்ளநடையாய்நடத்தல், — saxum carmine கல்லிலே கவிகொத்துதல்,signari patrii vultûs imagine தன்தகப்பன்சாயலாயிருத்தல். ‖ *Frapper au coin public*, கம்பட்டம்அடித்தல், -போடுதல்.‖ *Sceller*, முத்திரையிடுதல்.‖ *Désigner*, நியமித்தல்.‖ *Observer*, நோக்குதல்,பார்த்தல்,கவனித்தல்.‖*Orner*, சிறப்பித்தல், அலங்கரித்தல்.‖*Signifier*, அர்த்தமாதல்,பயன்கொள்ளுதல்.‖ *Signer*, கையொப்பம்போடுதல்,-இடுதல்.

Sign um,i,*n.Signe*,குறிப்பு,குறி, அறிகுறி, அச்சு.‖சைக்கினை, சாடை.‖ இராசி. ‖*Signal*, அடையாளம், சைகை, பயில்.‖*Vestige*, அடி.‖*Présage*, நிமித்தம்,சகுனம்.‖*Statue*,சரூபம், சிலை: asper signis கொத்துவேலையான. ‖ *Empreinte d'un sceau*,முத்திரைப்பதிவு,-பதிப்பு:signis integris முத்திரை கெடாமல். ‖ *Constellation*, தாராகணம், நகூத்திரம்:— rabiosum அக்கினிநகூத்திரம். ‖ *Enseigne*,கொடி, விருது,துவசம்.‖—*de boutique*, கடைக்கொடி,-குறிப்பு: —tollere கொடியேற்றுதல், வரவழைப்பித்தல்,signa relinquere படைவிட்டோடிப்போதல்,sub signis esse படையிற்சேவித்தல், படையணியிலிருத்தல்.

Sil,is,*n. Sil*, நெத்தியாரைகாவிக்கல்;

Silace us,a, um.*De sil*, ஷைகாவியின்.

Silan us, i, *m. Tuyau de fontaine*, ஊற்றுநீர்புறப்படுங்குழாய்.

Silar us,i,*m.Silaro*,(*Italie*) நதி.

Silat um,i,*n.Vin de séséli*, ஓர்விதசகுப்பிஊறினவிரசம். [ண்டு.

Sila us,i,*m. Esp.d'ache*, சகுப்புப்பு

Silen a,æ, *f. Femme un peu camuse*,சற்றுத்தட்டைமூக்குள்ளவள்.

Silend us,a,um, *part. ex* sileo. *V.* Tacendus:—causa மறுக்கவேண்டியகாரியம்.

Silen i,orum,*m.pl.Silènes* என்பவர்கள்,வனப்பொய்த்தேவர்.‖—(*Inde*)சனம்

Silen s,tis,*part.ex* sileo:silentes மரித்தவர்கள், —anni பித்தகோரென்பவன்சீஷர்கள்மவுனமாயிருக்கும்-டு -வருஷம், silentûm rex, *Pluton* என்பவன்.‖ *Calme*,அமரிக்கை-, ஏகாந்தமான: — à ventis காற்றெடுக்கமான,—luna அமாவாசி,— unda ஓடாத-, அலையாதசலம், —flos,—surculus வளராதபூ,- கிளை,—arbor தேவவிடைகொடாத மரம்,—arma சமரதானம்.‖*V.*Silentiosus.

Silenter,*adv.*—tio, *abl. En silence*, மவுனமாய், பேசாமல்.

Silentiari i,orum, *m.pl. Silenciaires*, அரமனையில்மவுன-ஒழுங்குபடித்துமுத்தியோகஸ்தர்.‖*Secrétaires*, இராயசர்.

Silentios us,a,um. *Silencieux*, மவுனமுள்ள,-ஆயிருக்கிற,பேசாத, மவுனகுணமுள்ள, சத்தமில்லாத,அமரிக்கை-,அடக்கமுள்ள.

Silenti um,i,*n.Silence*,மவுனம்,மௌனம், பேசாமை, மோனம், அடக்கம், சத்தநி-, சத்தமில்லாமை, அடக்கம்:—agere, facere, præstare மவுனமாதல்,- ஆயிருக்கச்செய்தல், —de illo est அவனைக்குறித்துப்பேச்சில்லை, —silentio prætervehi பேசாமல்மறைத்தல்.‖*Repos*, அமரிக்கை, ஓய்வு, ஒழிவு.‖ *Solitude*, தனிமை,ஏகாந்தம்:—causarum பிராதுகளின்ஒழிவு, per silentium பிரஸ்தாபமில்லாமல், in silentium abire மறக்கப்படுதல்.

*Silent us,a, um,*V.*Silentiosus.‖*Solitaire*, தனிமையான.

Silen us,a,um,*V.*Simus.

Sil eo,es,ui,ere,*v.n.et a. V.* Taceo.‖*Etre oisif*,ஒன்றுஞ்செய்யாது-, சும்மாவிருத்தல்: silet luna சந்திரன்பிரகாசிக்கிறதில்லை.

Siler,is,*n.Osier*,ஓலரி.‖*V.* Silarus.

Sil esco,escis,ui,escere,*v.n.Devenir silencieux*,மவுனமாதல்,மௌனகுணமாதல்.‖*Se calmer*, அமருதல், அடங்குதல்.

Silesi a,æ, *f.Silésie*, (*Prusse*) நாடு.

Sil ex,icis,*m.f.Caillou*, கல்,கரும்-, நெருப்புக்கல்.‖*Roc*, கற்பாறை: silicem pedibus conterere வீதிகளிலேதிரிதல்.

Silicari us,i,*m.V.*Odopœus.

Silicerni um,i, *n. Festin de funérailles*,இழவுவிருந்து.‖*vel.*

Silicerni us,i,*m. Qui marche courbé*,குனிந்துநடக்கிறவன்.

Silice us,—ci us,a,um. *De caillou*, கல்லின், கல்லாலான.‖ கன்னெஞ்சுள்ள.‖ *Impitoyable*, இரக்கமற்ற, இரங்காத.

Silici a, æ, *f. Sénegré*, வெந்தையம்,

Silicis,*gen.ex* silex. [வெந்தியம்.

Silicul a,æ,*f.Petite cosse*,(காயின்)சிறுதோல்,-நெற்று,-கோது.

Siliginari us,—ne us,a,um,*V.* Similagineus:—pistor சின்னஉரொட்டிசெய்கிறவன்.

Silig o,inis,*f.Pur froment*, முதல்தர-,சுத்தகோதும்பை.‖*V.*Simila.

Siliqu a,æ,*f. Cosse*, (அவரைமுதலியவற்றின்) காய், நெற்று, தோல், கோது.‖ *Légume*,கீரை, பயறு.‖ *Caroubier*, ஓர்மரம்.‖*Caroube*, அதின்கனி.‖ *Grain*, ஓர்சிற்றிடை, ஏறக்குறையஒன்றரைகுன்றிமணியரம்.‖*V.*Silicia, Ceraunia.

Siliquastr um,i,*n.V.* Piperitis.

Siliqu or...ari,*v.d.Pousser des cosses*,(அவரைமுதலியசெடி)காய்த்தல்.

Siliquos us,a,um. *Qui en a*,காய்-, தோல்-,நெற்றுள்ள.

Sil is, is, *m. Sile*,(*Venise*) நதி.

Sill i,orum,*m.pl.Silles*,பேர்பெற்றபிரபந்தத்துப்பரியாசப்பாவினை,-வசைக்கவிகள்; Sillograph us,i,*m.Sillographe*, ஷைகவிசெய்யும்புலவன்.

Silo,nis,*m.Camard*, சப்பைமூக்கன்.

Siloni um,i,*n.Silonium*,(*Italie*) நாடு. [(*Libye*)சனம்.

Silphi i, orum, *m. pl. Silphes*,

Silphi um,i,*n.V.*Laserpitium.

Silui,*præt.ex* sileo.

Silunclit us,i,*m.dim.ex* silus.

Silur es,um,*m.pl. Silures*, (*Angleterre*)சனம்: Silurum insul æ,arum,*f. pl.Sorlingues* என்னுந்தீவு. [ரியமீன்.

Silur us,i,*m.Esp.de poisson*, ஓர்பெ

Sil us,a,um, *V.*Simus.

Silv a,æ,*f.Forêt*,காடு,வனாந்தரம், வனம்,ஆரணியம்,கானகம்,கான்.‖ *Réunion d'arbres*,தோப்பு,சோலை:—viridis பச்சைச்செடிகள்.‖*Quantité*, மிகுதி,திரள், சேர்க்கை:—dicendi பேசுவதற்குமிகுந்தபொருண்மை.‖ *Arbre*, மரம்.‖ *Silves*, செய்யுட்சேர்க்கை.

Silvanect i,orum,*m.pl.Silvanectes*, (*Gaules*) சனம்.‖*Senlis*,இச்சனநகரம்.

Silvatic us,a,um. *De forêt*, காட்டு, வனத்து, காட்டில்வளருகிற. ‖ *Sauvage*, கூஷ்ட, கொடிய, காட்டுத்தனமுள்ள.

Silvesc o,is,ere, *v. n. Pousser trop de bois*, மிகுதி-, அதிகமாய்த்தழைத்தல்.

Silvest er,ri, *m. Silvestre* என்பவன்;

Silvest er,—t ris,ris,re, *V.* Silvaticus: — materia உயர்ந்த மரக்காடு. ‖ *Champêtre*, காட்டுப்புற,- போங்கான.

Silvicol a,æ, *m.f.*—cultri x, cis, *f. Habitant des forêts*, வனவாசி, காடுகளிற் சஞ்சரிக்கிறவன்,-வள், வனப்பிரியமுள்ள.

Silvifrag us,a,um. *Qui abat les forêts*, காடுகளைப்பெயர்க்கிற,-வெட்டுகிற.

Silviger, } a,um. *Bien boisé*, மிகுந்த
Silvos us, } காடு-சோலை- தோப்பு-மரங்களுள்ள,-வினால்திருக்கிற. [சிறுகாடு.

Silvul a,æ, *f. Bocage*, சோலை, தோப்பு

Silyb um,i, *n. Esp. de plante*, ஓர்பூண்டு. [தி.

Sil ys,ys, *m. Tanaïs, Don, (Russie)* நதி

Sim a,æ, *f. Gueule droite*, சிற்பப்பட்டையின்-, உத்திரப்படையின்குழைவு.

*Simat us,a,um. *Devenu camus*, சப்பைமூக்கனான.

Simblium mel, *n. Miel de Sicile*, சிசிலியதீவின்தேன்.

Simen i,orum, *m.pl. V.* Iceni.

Simia,æ, *f. Guenon*, பெண்குரங்கு, மந்தி, மூகம், குரங்கு. ‖ *Qui singe*, கண்டுபாவிக்கிற, போலிசெய்கிற. ‖ *Laid*, அவலக்ஷணை, குரங்குபோன்ற.

Simil a, æ,—lag o, inis, *f. Fleur de farine de froment*, கோதுமைபையின்மெல்லியமாவு. [ஷமாவின்,-மாவிலுள்ள.

Similagineus,a,um. *De cette farine*,

Similam en,inis, *n. V.* Simulamen.

Similar is,is, e. *Similaire*, ஒத்த, ஒரேவகை-, சமானமான.

Similigen us,a,um. *De même genre*, ஒரேவகையான,-பாலுள்ள.

Simil is,is, e, ior, limus, *gen. dat. Semblable*, ஒத்த, சரி-, நிகர்-, இனை-, ஒப்பு-, சமானமான: sui குணமாறுத, — aurum பொற்சருபம், simile ஒப்பு.

Similita s,tis, *f. Ressemblance*, சமானம், ஒப்பு, சரிசமானம், நிகர், போலி, பாவனை, சாயல்.

Similiter, *adv. Semblablement*, சரி-, ஒப்பு-, சமானமாய், போலே, ஒத்த-, ஒரேவிதமாய்.

Similitud o, inis, *f. V.* Similitas. ‖ *Conformité*, சம்பந்தம், பொருத்தம்: similitudinem reddere சரியாய்ச்சித்திரித்தல். ‖ *Imitation de style*, வசனநடை-, மாதிரியைக்கண்டுபாவித்தல். ‖ *Similitude*, ஒப்பனை, உவமை.

Simil o,as,are, *v.a. Ressembler*, ஒப்பாயிருத்தல், போலுதல். [குரங்கின்.

Siminin us,a,um. *De singe*, குரக்கு,

Simiol us,i, *m. Petit singe*, சின்னகுரங்கு. ‖ *Mauvaise copie*, கெட்டபாவனை, சரியாய்க்கண்டுபாவியாதவன். ‖ *Homme vil*, நீசன்.

Simiotic a,æ, *f. Traité des symptômes*, வியாதியின்குறிகளைத்தெளிவிக்கும் வைத்தியசாஸ்திரப்பங்கு.

*Simitu, *P.* Simul.

Simi us,i, *m. Singe*, குரங்கு, வானரம், வலிமுகம், மந்தி, குரங்குமுகமுள்ளவன். [குசப்பையாக்குதல்.

Sim o...are, *v.a. Rendre camus*, மூக்

Simo, nis, *m. Vieillard camus*, (நாடகத்து) சப்பைமூக்குள்ளகிழவன். ‖ *Dauphin*, ஓர்விதகடற்பன்றி. [தி.

Simo is,entis, *m. Simoïs*, (*Troade*), நதி

*Simoni a,æ, *f. Simonie*, திரு-, வேத-, ஞானப்பொருளின்விற்பனை,-கொள்வனை, திருப்பட்டம்- உத்தியோகம்-பொருள்இரயத்துக்குக்கொடுக்கிற- வாங்குகிறபாவம்; * Simoniac us,a, um. *Simoniaque*, ஷபாவமுள்ள,-செய்கிற. [என்றபதிதர்.

*Simonian i,orum, *m.pl. Simoniens*,

Simonid es,is, *m. Simonide* என்பவன், ஓர்புலவன்; Simonide us,a, um. *De Simonide*, ஷையவன்அ. ‖ அக்கமுள்ள.

Simplar is,is,e,—ri us,a,um. *Simple*, ஒற்றை, ஒன்றுன, இரட்டையல்லாத, வெறும், தனி, கலப்பற்ற.

Simpl ex,icis, *o.g.* icior,icissimus, *V.* Simplaris. ‖ *Simple*, இயல்பு-, சுபாவமான, சூக்ஷ்ம-, எடுப்பு-, சிறப்பற்ற. ‖ கபடு-, வஞ்சனையில்லாத, பேதையான, பரமார்த்த. ‖ *Neuf*, பரீட்சை-, வழக்கம்-, அப்பியாசமற்ற, அறியாத. ‖ *Ingénu*, உண்மை-, இவள்ளையான, நிறந்தமனமுள்ள.

Simplici a,um, *n.pl. Simples*, மருந்துப்பூண்டுகள், பச்சிலைகள்.

Simplicita s,tis, *f. Etat de simple*, ஒற்றையானதன்மை, ஒருமை, கலப்பில்லாமை. ‖ *Simplicité*, இயல்பு, சுபாவம், கபடில்லாமை, நிறந்தமனம், உண்மை.

Simpliciter,—tùs,*adv.Simplement*, இயல்பு-,சுபாவம்-,உண்மை-, தெளிவு-, வெள்ளையாய்,சூட்சம்-,சிறப்பு-,எடுப்பு-,கபடு-,வஞ்சனை-,மோசமின்றி,பேதை-, பரமார்த்தமாய: simpliciùs nutrire simultates தன்பகைவெளிப்படவிடுதல்.

*Simplic o,as,are,*v.a. Rendre simple*, ஒற்றையாக்குதல்.‖ பேதையாக்குதல். [ம்-,ஒற்றை-,இயல்பாய்.‖மாத்திரம்.

Simplò, *adv. Simplement*, ஒருவித

Simpludiari us, a, um. *Célébré par de simples jeux*, விளையாட்டினல்மாத்திரங்கொண்டாடப்பட்ட.

Simpl um,i,*n. Le simple*, இயல்பு,ஒருமை-,ஒற்றையானது.

Simpl us,a,um,*V.*Simplaris.

Simpulariari us, i, *m. Faiseur de simpulum*, சிறுபலிப்பாத்திரங்களைச் செய்கிறவன்.

Simpulari us, a,um. *De peu de valeur*, அற்பவிலையுள்ள,-பெறுமதி.‖ *V.*Esculentus, Potabilis.

Simpulator,is,*m.Convive*, விருத்தன்

Simpulatri x,cis, *f. Femme qui fait des expiations*,பிராயச்சித்தக்காரி.

Simpulon a, æ, *f. Femme qui aime la table*,போசனப்பிரியமுள்ளவள்.

Simpulon es, um,*m.pl.Amis de l'époux*,மாப்பிள்ளைத்தோழர்.

Simpul um,—puvi um, i, *n. Petit vase de sacrifices*, சிறுபலிப்பாத்திரம்: excitare fluctum in simpulo அற்பகாரியத்துக்குமிகவுங்கோபித்தல்,-அலைதல்.

Simpuviatri x, cis, *f. V.* Simpulatrix.

Simul,*adv. Ensemble*,கூட, ஒருமிக்க,ஒருங்குடனே, துணை-,ஒன்றுய்,ஒரிடத்தில்.‖*En même temps*,ஒரேகாலத்தில்.‖ *D'abord*,முந்த,உடனே:—ac,atque,ut உடனே,மாத்திரத்தில்,—terrâ —mari பூமியிலுங்கடலிலும்.

Simulacr um,i,*n.Statue*, சரூபம்.‖நிலை, பிரதிமை, விக்கிரகம்: — noctium conscium பதிக்கிறஅறை விக்கிரகம்.‖ *Fantôme*,பூதம், வீண்தோற்றம்.‖ *vel*

Simulam en,inis,—ment um,i, *n. Image*, சாயல்,பாவனை,உருபம்,ஒப்பு,வடிவு,நிழலாட்டம்.

Simulanter,—latè,*adv. Avec feinte*,வேஷம்-,கபடம்-,பொலி-,பொய்யாய்.

Simulatil is,is,e.*Simulé*,கள்ள,பொலி-,வேஷம்-,பொய்-, பாவனையான.

Simulatio,nis,*f.Feinte*,வேஷம், கள்ளத்தனம்,பொலி,மாயம்,கபடு.‖ *Prétexte*,போக்கு.‖*Ressemblance*, ஒப்பு, பாவனை,சாயல்.

Simulator,is, *m. Qui feint*, வேஷம்போடுகிறவன், கபடு-, பொலேசெய்கிறவன்.‖*Fourbe*,கபடன்,சுத்தன்.‖ *Hypocrite*,கள்ளசூரணி.‖*Imitateur*, கண்டுபாவிக்கிறவன்.

Simulatri x,cis,*f.Qui métamorphose*, வேற்றுருவமாக்குகிறசூனியக்காரி.

Simul o...are,*v.a.Représenter*,பாவித்தல்,காட்டுதல்.‖*Contrefaire*,வேஷமிடுதல்,-போடுதல்,பொலி-, பொலேசெய்தல்,-காட்டுதல்,கள்ளத்தனம்-, கபடுபண்ணுதல்.‖*Supposer*,உண்டென்றுஅபத்தமாய்ச்சொல்லுதல்: —votum வேண்டுதலைப்போக்காகச்சொல்லுதல்.

Simulta s,tis,*f.Haine*, பகை,வன்மம், வைராக்கியம்.‖*V.* Conventum.

Simultè,—ter, *adv.*Similiter.

Simil us,a,um,*dim.ex*

Sim us,a,um.*Camus*, சப்பை-,சப்பட்டை-,தட்டைமூக்குள்ள.

Sin,*conj.Mais si*, ஆனல், ஆல், எயாகில்: sin aliter, minùs, secùs அப்படியிராவிட்டால், இல்லாவிட்டால், அல்லது.

Sin a,æ, Sina, Sinaï, *ind. f. Sinaï, (Arabie)*மலை. [சம்.

Sin a,æ,*f.Chine*,(*Asie*)சீனம், சீனதே

Sin æ,arum,*m.pl.Chinois*, சீனக்காரர்;Sinens is,is,e.*De Chine*, சீன, சீனதேசத்து.

Sinap e,is,—pi um,i, —pi, *ind. n.* —p is, is, *f.Moutarde*,கடுகு, ஐயவி,சித்தார்த்தம்.

Sinapedoch os,i,*m.Moutardier*, கடுகுக்கூடு,-கலம்,-பாத்திரம். [கின்.

Sinapin us,a,um. *De moutarde*, கடு

Sinapism us,i,*m.Sinapisme*,கடுகுப்புற்கை.‖*Effet du sinapisme*,[கைபுற்கையின்பலிப்பு.‖*Esp.de torture*,ஓர்வேதனை

Sinapiz o,as,are, *v.a. Assaissonner de moutarde*, கடுகுபோடுதல். ‖ *Mettre un sinapisme* கடுகுப்புற்கைபோடுதல்.

Sincerè,—riter,*adv.Sincèrement*,உண்மை-,நிசமாய்,வஞ்சனையின்றி.‖ *Avec intégrité*, பிரமாணிக்கம்-, தாணயமாய்.

Sincerita s,tis,*f.Pureté*, சுத்தம், பரி சுத்தம், கலப்பில்லாமை:—corporis சரீர சவுக்கியம்.‖*Sincérité*, உண்மை, நிசம், கபடில்லாமை.‖ *Intégrité*, நாணயம், பிரமாணிக்கம், நேர்மை.

Sincer us,a,um. *Pur*, சுத்த, பரிசுத்த, பழுது-, மரு-, கலப்பற்ற. ‖ *Entier*, முழு, குறையற்ற:— corpus காயமற்றசரீரம்.‖*Sincère*, உண்மை-, நிசம்-, நாணயமான, மெய்யான, பொய்யாத.‖*Sain*, சவுக்கியம்-, திடமான.

Sincip ut,itis,*n.Sinciput*, தலையுச்சி, -முன்பக்கம்.‖ *Tête*, தலை.‖*Bajoue*, சமைத்தபன்றிக்கறுப்பு.

Sind æ,arum, *f.pl. Iles Andaman, (golfe du Bengale)* தீவுகள்.

Sind i,orum, *m.pl. Sindes, (Palus-Méotides)* சனம்; Sindic us, a, um. *De leur pays*, ஷெசனத்தேசத்து: — portus, *Sundjik, (Circassie)* நகர், துறை.

Sindon, is,*f. Suaire*, மூடுதாறு, பரிவட்ட-, பிரேதச்சீலை.

Sine,*præp.abl.Sans*, இல்லாமல், இன்றி, அற.‖*imp.ex* sino.

Sing a,æ,*f.Pallas* என்பவள். [னம்.

Sing æ,arum, *m.pl.Singes, (Inde)* சு

Singidun um,i,*n.Belgrade,(Servie)* நகர்.

Singillatim,*adv.V.*Singulatim.

Singiticus sinus,*m. Golfe Singitique,(Macédoine)* குடா.

Singlariter,*adv.V.* Singulariter.

Singular es,ium, *m.pl. Gardes du corps*, மெய்காப்பாளர்.

Singulari æ,arum,*f.pl.Lettres initiales*, ஒவ்வொருவர்த்தைக்குமிப்பாகுத்தனிமுதல் அகூதரங்கள்.

Singularié,*adv.V.* Singulariter.

Singulari i,orum,*m.pl.Notaires*, கணக்கர், சாதனக்காரர்.‖ *V.*Singulares, Referendarius.

Singular is,is,*m.Singulier*, ஒருமை.

Singular is, is, e, } *V.*Solus:—po-
Singulari us,a,um, } tentia ஏகசக்கராபதித்துவம்.‖ *Singulier*, நாதனம்-, அருமை-, அதிசயமான, அபூருவ, விசேஷ, உச்சித, உத்தம: —herba உத்தமபச்சிலை, — remedium தப்பாதமருந்து, — numerus ஒருமை.

*Singularita s, tis, *f. Etat d'être seul*, தனிமை.‖ *Singulier*, ஒருமை.

Singulariter,*adv. Au singulier*, ஒருமையில்.‖*Solitairement*, தனியே, ஏகாத்தமாய்.‖*Singulièrement*, விசேஷம்-, பிரதானம்-, அபூர்வமாய், மிகவும்.

Singulatim,*adv. En particulier*, தனியே, தனித்தனியே.‖*Un à un*, ஒவ்வொன்றாய்.

Singul i,æ,a.*Un à un*, அத்தத்த, ஒவ்வொரு, ஒவ்வொருவன், ஒவ்வொன்று, ஒவ்வொன்றாய், ஒன்றுபின் ஒன்று: per singulos தலைவீதமாக, அவரவருக்கு, in singulos dies அத்தத்தநாளைக்கு, singulis annis வருஷந்தோறும்.‖*Seul*, தனி, ஏக, தனித்த.‖*Singulier*, ஒருமையான.‖விசேஷ, உச்சித.

Singultat us,a,um. *Entrecoupé de sanglots*, விம்மல்கூடிய,- தடைக்கிற.

Singultim,*adv.En sanglotant*, விம்மிக்கொண்டு.

Singult io,is,ire,*v.n.Sangloter*,விம்மூதல்,விம்மியழுதல்,தேம்புதல், பொருமுதல்.‖*V.* Glocido.

Singult o,as, are, *v. n. Sangloter beaucoup*, மிகவும்விம்மூதல்,- பெருமூச்செறிதல்:—animam உயிர்விடுதல்.

Singult us,ûs, *m.Sanglot*, விம்மல், பெருமூச்சு, தேம்பல்: —gallinæ கோழிகத்தல்.

Singul us,a,um,*V.*Singuli. [ர்.

Sing us,i,*m.Sigga, (Macédoine)* நக

Sinist er,ra,rum.*Gauche*,இட, இடது, இடப்பக்கத்து.‖*Heureux*, நல்ல, சுப, அநுகூலம்-,பாக்கியமான, நற்குறியான, நற்சகுன, (அஞ்ஞானம்). ‖ *Sinistre*, கெட்ட, அடாத, கேடுள்ள, துர்நிமித்த, துர்க்குறியான.‖ *Pervers*, பொல்லாத: fidei sinister பிரமாணிக்கமில்லாதவன்.

Sinisterita s,tis,*f.Malignité*, கெட்டகுணம்.‖*Gaucherie*,தவறு,பிசகு, மூடத்தனம்.

Sinistr a,æ,*f.Main,côté gauche*, இடங்கை, இடதுகை,-பக்கம்: sinistrâ, à sinistrâ இடப்புறத்தில்.

Sinistrè,*adv.Mal*,தின்மையாய், அடாதவிதம்-, கெட்டகருத்தாய், பிரியமின்றி.

Sinistr o...are,*v.n. Tourner, mener à gauche*, இடசாரிபோதல், இடப்புறமாய்த்திரும்புதல், - கூட்டிப்போதல்.‖ *Etre gaucher*, இடங்கைக்காரனாயிருத்தல்.

Sinistrorsùm,—trorsùs,— troversùs,*adv.A gauche*,இடத்தே, இடதுபக்

கத்தில், -பாரிசத்தில், இடப்புறமாய்.

Si no,nis,vi,tum,nere,*v.a.Permettre*,ஒட்டுதல், விடுதல், உத்தரவு-, இடம்-, இளக்காரங்கொடுத்தல்: quantùm res sinit கூடினமாத்திரம். [ளபூண்டு.

Sinon,is,*f. Esp. de plante*, காரமூன்

Sinop e,es,*f.Sinope,Sinub,(Asie mineure)* நகர்.‖ *V.* Sinuessa.

Sinopens is,is, e,—pe us,a,um.*De Sinope*,ஷெநகரத்து: — cynicus,*Diogène* என்பவன்.

*Sinophi a,æ,*f.Matière plâtreuse*, சுண்ணம்போலஉறைந்தபித்தம்.

Sinopi s, dis, *f. Sinope*, ஓர்விதசெம்மண்;Sinopic us, a, um. *De sinope*, ஷெசெம்மண்ணுலான, -மண்நிறமான.

Sintic a,æ,*f. Sintique, (Macédoine)* நாடு.

Sinuam en,inis,*n.*—atio, nis, *f.*—at us,ûs,*m.Sinuosité*,சுற்று,வளைவு,நெளிவு,கோணல்.

Sinuess a,æ,*f.Sinuesse,(Campanie)* நகர்;Sinuessan us,a,um. *De Sinuesse*, ஷெநகரத்து.

Sin um,i,*n.Pot*, கலயம், பாத்திரம்.

Sinu o...are,*v.a.Courber*,வளைத்தல், மடக்குதல், சுற்றுவித்தல், கோணுவித்தல்,நெளித்தல்:—arcum வில்லேற்றுதல், — terga பிறகாலேகுனிதல், — oceanum கடலைஅலைவித்தல்.‖*Creuser*, தோண்டுதல். [ment,கருகலாய்.

Sinuosè,*adv. V.*Flexuosè.‖*Obscuré*-

Sinuos us,a,um. *Sinueux*, சுற்று-, சுழற்சி-,வளைவு--, நெளிவு-, கோணல்-,மடிப்புள்ள,கோணிய, வளைந்த, நெளிஇற: —arcus ஏற்றினவில்,—narratio சிக்கு-, கருகலானசரித்திரம்.

Sin us,i,*m. V.* Sinum.

Sin us,ûs,*m.Sein*,நெஞ்சு, மார்பு, மடி.‖இருதயம்,உள்ளம்.‖ கருப்பம்: sinu gestare கையில்ஏந்தியிருத்தல்.‖*Milieu*, நடு,இடை: in sinu pacis சமாதானகாலத்தில்,—suo habere தன்கையிற்-வசத்திற்கொண்டிருத்தல்.‖*Refuge*, அடைக்கலம்.‖ *Bourse*, மடியில்வைக்கும்பை: sinum subducere bonis நேரிடுஇற நன்மையைப்பிறக்கணித்தல்.‖ *Concavité*, குழி, பள்ளம்.‖*Courbure*,வளைவு:—oculorum கண்ணிமை, —ulceris புண்ணின்புரை.‖*Gouffre*, பாதாளம், ஆழ்ந்தகுழி.‖ *Pan de robe*,முன்றானை, வஸ்திரதொங்கல்.‖*Pli*,மடிப்பு: —purpurei தூமிரவஸ்திரம்.‖*Sinuosité*,சுற்று,சுழற்சி, கோணல்.‖*Voile*, (கப்பலின்) பாய்.‖ *Tresse de cheveux*,தலைமயிர்ச்சுருள்.‖*Filet*,வலை, கண்ணி.‖*Golfe*,குடா, குடாக்கடல், கடற்கரைவளைவு:—Barbaricus,*Mer de Zanguebar*;—Cyrrhæus,*Golphe de Lépante*;— Gallicus, — Cantabricus, *Golfe de Gascogne*; — Gangeticus, *Golfe du Bengale*;—Ligusticus,*Golfe de Gênes*; —Leonis,*Golfe du Lion*;—Saronicus, *Golfe Saronique*,(*mer Egée*);—Sipontticus,*Golfe de Manfrédonia*;— Venedicus,*Golfe de Dantzick* என்னுங்குடாக்கடல். [*Jérusalem* என்னுமாநகரம்.

Sion,is,*m.Sion, (Jérusalem)* மலை.‖

Si on,i,*n. V.*Laver. [திரைச்சீலை.

Sipari um,i,*n.Rideau*, (நாடகத்து)

Sipar um,i,*n.Voile de perroquet*, கப்பலினுச்சிப்பாய்.

Siphn os,—n us,i,*f. Siphano, (Archipel)*தீவு;Siphni us,a,um.*De Siphano*, ஷெதீவின்.

Sipho,nis,—phon,is,*m. V.*Diabetes.‖*Seringue*,பீர்ச்சாங்குழல்.‖ *Pompe*, நீரியந்திரம், தீயவிக்குஞ்சலகூந்திரம்.

Siphuncul us,i, *m. Petit siphon*, இருபுறம்வளைந்தசிறுகுழல்.

Siphr a,æ,*f.Chiffre*, கணக்கக்ஷரம்.

*Sip o,as,are,*v.a.Jeter*,எறிதல்.

Siphyl is,is,*f. Mal vénérien*,சிரந்தி.

Sipunt um,i,*n.*—pu s, ntis, *f. Siponto, (Italie)* நகர்; Sipontic us, — ti us,a,um.*De Siponto*, ஷெநகரத்து.

Sipyl um,i,*n.Sipyle, (Lydie)* நகர்.

Sipyl us,i,*m.Sipyle,(Lydie)* மலை;Sipylei us, a, um. *De Sipyle*, ஷெமலையின்:—genitrix, *Niobé* என்பவள்.

Si quâ, *P.* Si aliquâ.

Si quando,*P.* Si aliquando.

Siquidem, *conj. Puisque*, படியினாலே.‖*Si toutefois*, ஆயினும்... ஏனில்.‖ *Car*, ஏனென்றால்.

Si quis,quæ,quod, quid, *P.* Si aliquis... *Si quelqu'un*, யாதொருவன்,யாதொருத்தி-,யாதொன்று... ஆகில்,-ஆல்.

Siræ um,i,*n.Vin cuit*, காய்ச்சினவிராசம். [*douil,(Egypte)* ஏரி.

Sirbonis lacus, *m. Sébaker - Bar-*

Sircitul a,—cul a,æ,*f. Esp.de raisin*,எளிதாய்க்காப்பாற்றப்படத் திராட்சை
Siredon es,um,*f.pl.V.*Siren.[வகை.
Siremps. *Tout pareil*, முழுதும்ஒத்த,-சரியான: siremps esse ஒரேவிதமாய்நிறைவேறுதல்.
Siren,is,*f.Sirène*,தீராமகள், மையற்காரி,மோகினி, பாதிமச்சமும் பாதிஸ்திரீயுமானவள்(கதை).‖*Esp.d'insecte*, தேனீக்கூட்டுப்புழு.‖ *Esp.d'oiseau*,ஓர்பக்ஷி.
Sireni us,a,um.*De Sirène*, தீராமகளின்,-மகளிரின்.‖ *Attrayant*, இன்பத்தி ளுவிழுக்கிற, -மயக்குகிற; Sirenum petr æ, Sirenus æ insul æ,arum, *f. pl. Iles des Sirènes*,(*Méditerranée*) தீவுகள்-கு-;Sirenusarum promontori um, i, *n. Promontoire des Sirènes*, (*Naples*) முத்தல்.
Siriac us,a,um,*V.* Canicularis.
Sirias is,is, *f.Esp.d'inflammation*, அக்கினிநக்ஷத்திரத்தாலாகிற தலைமண்டைச்சவ்வுகளின்எரிவு.
*Siringin a,æ,*f.V.*Dysuria.
Sirion,is,*m.Hermon*,(*Palestine*), மலை.‖*Sirion* (*Aquitaine*) நகர்.
Sir is,is,*m.Torré -di- Senna*, (*Italie*) நகர்.‖ *Il Senno*, (*Lucanie*) நதி.‖ *Nil*, (*Ethiopie*) நதி.
Siris,*P.* Siveris, *ex* sino.
Siri us,i,*m.Sirius*, அக்கினிநக்ஷத்திரம்.‖ *Canicule*, கடுவேனில், ஷைநக்ஷத்திரகாலம்;Siri us,a,um, *V.*Canicularis.
Sirmi um,i,*n.Sirmich*,(*Hongrie*)நகர்;Sirmiens is,is,e.*De Sirmium*,ஷைந
Sirp e,is,*n.V.*Laserpitium.[கரத்து.
Sirpe a,æ,*f.V.*Scirpea.‖*Claie*,தட்டி,
Sirpe us,a,um, *V.*Juncinus.[படல்.
Sirpicul a,æ,*f. Petit panier*, சிறுகூடை,-குறவன்பெட்டி.[னும்பிசினுடைய.
Sirpic us,a,um.*De laser*, லசேர்என்
Sirp o...are, *v. a. Cercler*, வளையம்போடுதல்,வளையத்தாற்கட்டுதல்.‖ *Natter*, தாணலோடு-, தாணல்பின்னுதல்.
Sirp us,i,*m.Enigme*,விடுகதை,நொடி.‖Scirpus.
Sir us,i,*m.Fosse à blé*,தானியக்குழி.
Sis,*P.*Si vis,*vel* Suis.‖*subj.ex* sum.
Sisapo,nis,*m.Almaden*,(*Espagne*)நக
Sisar a,æ, *f. V.*Erice.[கர்.

Sisarr a,æ,*f.Brebis de plus d'un an*, ஓர்வருஷமேற்பட்டஆடு.
Sisar on,—sar um,i, — ser,is, *n. Chervis*, ஓர்கிழங்.
Sisci a,æ,*f.Sissek*,(*Autriche*) நகர்.
Sispes,—pita,*P.*Sospes,—pita.
Sissiat,—sitat,*P.*Sedet
Sistent o,as,are, *V.* Ostento.
Sist o,is,(stiti,statum) ere,*v.a.et n. Retenir*, நிறுத்துதல், தடுத்தல், அடக்குதல், மறித்தல்: — gradum நிற்றல், — ventrem பேதியைநிறுத்துதல்,— fletus அழுகையடுதல்.‖*Consolider*, நிலை-, உறுதிப்படுத்துதல், தாங்குதல்.‖*Placer*, வைத்தல்,ஸ்தாபித்தல்:—templum கோயில்கட்டுதல்.‖*Assigner*,கெடுவைத்தல், குறித்தல், நீதிஸ்தலத்துக்கு வரவழைப்பித்தல்.‖*Représenter*, ஒப்பித்தல், காட்டுதல், கெடுவுக்குவருவித்தல்.‖*S'arrêter*, நிற்றல், நின்றுபோதல், தங்குதல், சஞ்சரித்தல், வர்சம்பண்ணுதல்:— contra எதிர்த்தல்.‖*Etre*,இருத்தல்.‖ *Subsister*, நிலைத்தல், நிலைநிற்றல்,பிழைத்தல்.
Sistr um,i,*n. Sistre*, எழிப்த்துதோப்பறை; Sistrat us, a,um. *Qui en tient un*, ஷை பறைகையிற்பிடித்திருக்கிற.
Sisurn a,æ,*f.Tunique de peau*,தோலுட்சட்டை.
Sisyph us, i, *m. Sisyphe* என்பவன்; Sisyphi us,a,um.*De Sisyphe*, ஷைஅவனது.
Sisymbri um,i,*n.Esp.de menthe*, ஓர்வித துளசி, அதறுங் கலியாணப்பெண்ணுக்குமுடிசெய்வார்கள்.‖ *Habit, ornement de femme*, ஓர்ஸ்திரீயாடை,-ஆபரணம். [மானம்-,மஹிமைநாடுகிறவன்,-வள்.
Sisyphid a,æ,*m.f.Ambitieux*,வெகு
Sisyr a,æ, *f. Habit de peau de chèvre*,வெள்ளாட்டுத்தோலுடை.
Sisyrinchi um,i, *n. Esp.de plante*, ஓர்வித கிழங்கு.
Sitac e,es,*f.Herbé*,(*Babylonie*) நகர்
Sitagog us,a,um. *Qui porte, mène des vivres*,இரஸதுக்கஷ்சுமந்து-ஏற்றிக்கொண்டுபோகிற.
Sitani on,i,*n.Blé de mars*, பங்குனிமாதக்கோதும்பை. [ம்பையின்.
Sitan us,a,um.*De ce blé*,ஷைகோது
Sitarchi a, æ, *f. Intendance des vivres*, அன்னவர்க்க-, இரஸவிசாரணை.

Sitarch a, æ, *m. Intendant des vivres,* ஷெவிசாரணைக்காரன்.

Sitarci a, æ, *f. Provision de blé par mois,* மாதத்துத்தானியப்படி.‖ *Sac,* சாக்கு, பை.

Sitell a, æ, *f. dim. ex* situla.‖ *Urne des votes* அநுமதிச்சீட்டு போடுங்குண்டம்.

Sithon, is, *m.*—ni s, dis, *f.*— ni us, a, um, *V.* Thracius. [டு.

Sithoni a, æ, *f. Sithonie, (Thrace)* நா

Sitibund us, a, um. *Très-altéré,* வெகுதாகமுள்ள.

Sitic en, inis, *m. Joueur de trompette funèbre,* இழவெக்காளமூதுகிறவன்.

Siticulos us, a, um. *Altérant,* தாகம்வருவிக்கிற,-தாண்டுகிற.‖ *vel*

Sitien s, tis, *gen. part. ex* sitio. *Altéré,* தாகமுள்ள.‖ *Avide,* பேராசை-, ஆவலுள்ள:—aures கேட்கவிரும்புகிற காதுகள்.‖ *Aride,* காய்ந்த, வறண்ட, ஈரமற்ற:—luna அமாவாசி.

Sitienter, *adv. Ardemment,* பேராசை-, ஆவல்-, தாகமாய்.

Sitienti a, um, *n. pl. Lieux secs,* காய்ந்த-, வறண்டவிடங்கள்.

Sit io, is, ivi, ire, *v. n. et a. Avoir soif,* தாகமாயிருத்தல், தாகித்தல், தவித்தல்.‖ *Etre aride,* காய்த்து-, வறண்டு-, வற்றியிருத்தல்.‖ *Désirer ardemment,* மிகவும் அபேட்சித்தல்:—eruores இரத்தஞ்சிந்துவிக்கவெகுவாய்விரும்புதல்.

Sit is, is, *f. Soif,* தாகம், நாவறட்சி, தவனம், தவிப்பு: sitim explere, pellere, relevare, restinguere தாகந்தீர்த்தல்.‖ *Ardeur,* பேராசை, அவா, ஆவல்.‖ *Aridité,* வறட்சி, காய்வு.

Sitist a ov a, orum, *n. pl. OEufs couvés,* அடைகாத்த-, அடைமூட்டை.

Sititor, is, *m. Passionné,* ஆவல்-, தாகமுள்ளவன்.

Sitivè, *adv. Quand à la situation,* இடத்துத்தன்மையை-, இருப்பைக்குறித்

Sitivi, *præt. ex* sitio. [து-, பற்றி.

Sitocapel us, i, *m. Blatier,* கோதுமை-, தானியவியாபாரி.

Sitocomi a, æ, *f. V.* Sitarchia.‖ *Fourniture de vivres,* (கைம்பெண்சாதிகளுக்கும் அநாதபிள்ளைகளுக்கும்) வருஷத்துக்குக்கொடுக்குமிரஸது. [இரஸதுக்குறை.

Sitodi a, æ, *f. Disette de blé,* தானிய-,

Sitodosi a, æ, *f. Largesse de blé,* தானியதானம்; Sitodot es, is, *m. Qui en fait,* ஷெதானம்பண்ணுகிறவன்.

Sitologus, a, um. *Qui ramasse le blé,* தானியத்தைச்சேகரிக்கிற.

Sotometr a, æ, *m. Mesureur, distributeur de blé,* தானியமளக்கிறவன், வருஷத்துக்குத்தானியம் அளந்துகொடுக்கிறவன்.

Sitometri um, i, *n. Mesure de 4 boisseaux,* ச-பெரியமரக்கால்ளவை, அதுவே அடிமைகளுக்குமாதப்படியாம்.

Siton es, æ, *m. Qui se pourvoit de blé,* தனக்குவேண்டியதானியம் வாங்கிச்சேகரிக்கிறவன்.‖ *Général des vivres,* தானிய-, இரஸதுவிசாரணைத்தலைவன்.

Siton es, um, *m. pl. Sitons, (Norvége)* சனம். [தானியம்வாங்குகிறவிசாரணை.

Sitoni a, æ, *f. Soin de l'achat du blé,*

Sitonic um, i, *n. Grenier,* களஞ்சியம்.‖ *Grange,* கதிர்க்கட்டுச்சாலை,-வீடு.

Sitophylac es, um, *m. pl. Intendans des farines, (Athènes)* மாவுவிசாரணைக்காரர், உய- பேரிருந்தார்கள்.

Sit os, i, *m. Froment,* கோதும்மை.

Sitostasi us, i, *m. Président de la vente du blé,* தானியவிற்பனையின்விசாரணையதிகாரி,-தானியவிலைகுறிப்பவன்.

Sittac e, es, *f. V.* Psittacus. [டுதாசி.

Sittyb a, æ, *f. Vélin,* மெல்லியதோற்கு

*Situl a, æ, *f.*—l us, i, *m. Seau,* ஏற்றச்சால், தண்ணீர்மொள்ளுந்தொட்டி.‖ *Vase à bulletin,* திருவுளச்சீட்டுப்போடுபாத்திரம்.

Situr us, a, um, *part. fut. ex* sino.

Sit us, ûs, *m. Situation,* இருப்பு, இடம், ஸ்தலம், நிலை, இடத்தன்மை.‖ *Pays,* தேசம், நாடு.‖ *Relent,* பூஞ்சின்-, பாண்டல்நாற்றம்.‖ *Rouille,* துரு: situ exesus துருவினல்மிதித்த,—obsitus மறக்கப்பட்ட, situ emori வழக்கம்மறுப்போதல்.‖ *Crasse,* அழுக்கு, அசுத்தம், ஊத்தை:—araneosus இலந்திநூல், situ campus durescit தரிசுநிலங் கெட்டியாகின்றது.‖ *V.* Mucor.

Sit us, a, um, *part. ex* sino.‖ *Situé,* இருக்கிற, உள்ள.‖ *Fondé,* ஏற்படுத்த-, ஸ்தாபிக்க-, கட்டப்பட்ட.‖ *Placé,* வைக்கப்பட்ட: situm est in vestrâ manu, in vobis உங்களாலேகூடும்,-ஆகலாம்.‖ *Enterré,* புதைக்கப்பட்ட. [மாசம்.

*Sivan, *ind. m. Sivan,* (யூதரில்) வைகாசி

Sive,*conj.Soit*,ஆனாலும், ஆகிலும், ஆவது.‖*Ou*,அல்லது.‖*Soitque*,ஆலும்.‖*Ou si*,அல்லது...ஆகில்,—etiam அல்லது..தா
Sivi,*præt.ex* sino.[விளை,-அதிகமாய்.
Sivis,*P.* Siveris, *ex* sino.
Sizet a,æ,*f. Larysse*, (*Syrie*) நகர்.

SL

Slav i,orum,*m.pl.Slaves*, (*Europe*) சனம்.
Slavi a,—voni a,æ,*f.V.* Sclavonia.
Slesi a,æ,*f.V.* Silesia.
Slesvic um, i, *n. Sleswick*, (*Danemarck*)நகர்,நாடு;Slevicens is,is,e.*Du Sleswick*,ஷெநாட்டு.
Sluz a,æ,*f. Ecluse*,(*Hollande*)நகர்.

SM

Smalkald a,æ,*f. Smalkalde*, (*Allemagne*)நகர்.
Smaragdine us,—n us,a,um.*Smaragdin*,மரகதநிறமான, பச்சை.
Smaragdit es,æ,*m.Mont Thébaïde*, (*Calcédoine*) மலை.‖*Esp. de marbre*, மரகதம்போன்றபளிங்குக்கல்.
Smaragd us,i,*m.Emeraude*, மரகதம்,பச்சைக்கல்,-யிரத்தினம். [டல்மீன்.
Smari s,dis,*f.Esp.de poisson*, சிறுக
Smect is, is, *f. Smectite*, உழ-, உழை-,சவட்டுமண்,பூவழலை.
Smegma,tis,*n.Savon*, சவுக்காரம்.‖ *Remède détersif*, அழுக்குப்போக்கும்-துடைக்கும்மருந்து.
Smectic us, } a,um.*Détersif*, துடைப்பதற்குரிய, சுத்திசெய்வதற்குரிய, கறை-, அழுக்குப்போக்குகிற. [*seron*,படருகிறஓர்விதபுல்.
Smegmatic us, }
Smila x,cis,*f. If*, ஓர்விதமரம்.‖ *Li-*
Smili on,i,*n. Collyre actif*,சீக்கிரத்திற்பலிக்கிறகலிக்கம்.
Sminthe us, i, *vel* os, *m. Destructeur de rats*,எலிசங்காரன்.‖*Apollon* என்பவன்.
Sminthi um,i,*n.Sminthium*, (*Troade*) அப்போல்லோன்என்பவன்கோயில்; Sminthi us, a, um. *De Sminthium*, ஷெகோயிலின். [*Emeri*, ஓர்விததாது.
Smyri s,dis,*f.*—rit es,æ, *vel* is,*m.*
Smyrn a,æ,*f.Smyrne*,(*Asie mineure*)நகர்; Smyrnæ us,a,um. *De Smyrne*,ஷெநகரத்து.

Smyrni um,i,*n.Véche*,ஓர்புல்.‖ *Maceron*,ஓர்பூண்டு.
Smyrrhi a,æ,*f.Cerfeuil musqué*,ஓர்பூடு. [மீன்.
Smyr us,i, *m. Lamproie mâle*, ஓர்

SO

Soan a,æ,*f. Soane*, (*Sarmatie, Taprobane*)நதி. [*Cappadoce*) நகர்.
Soand a, æ, *f. Soande*, (*Arménie*,
Soan es,um,*m.pl.Soanes*, (*Caucase*) சனம். [*bane*)சனம்.
Soan i,orum,*m.pl. Soanes*,(*Tapro-*
Sobal a,æ,*f.Sobala*, (*Carie*)நகர்.
Sobell a,æ,*f.V.* Martes.
Sobol es, is,*f. Race*, கோத்திரம்,சந்ததி, சந்தானம்;வமிசம், பிள்ளை.‖ *Rejeton*, துளிர், கிளை.‖*Petits cheveux*,சிறுதலைமயிர்கள்.
Sobolesc o,is,ere,*v. n.Se multiplier*,வர்த்தித்தல்,பலுகுதல், பெருகுதல்.
Sobriè,*adv. Sobrement*, மட்டுணவாய்,பானமட்டாய்.‖ அடக்கம்-, ஒடுக்கமாய், மட்டுத்திட்டமாய்.
Sobriefact us,a, um. *Rendu sobre*, (உணவுமுதலியவற்றில்) மட்டுள்ளவனான, அடக்கம் படிப்பிக்கப்பட்ட.
Sobrieta s,tis,*f. Sobriété*,மட்டாசனம், மட்டுணவு,குடிப்பு-,பானமட்டு.‖ மட்டு, அடக்கம்,ஒடுக்கம்,திட்டம், நிதானம்.
Sobrin us,i, *m.* —n a,æ, *f. Cousin* (*cousine*) *issu de germain*, மூன்றாங்காலுறவின்முறையான்,- யாள், மைச்சுனன்-, மைச்சுனிச்சிமகன், - மகள்.
*Sobri o,as,are,*v.a.Rendre sobre*, உணவில்-,பானத்தில்-, யாதொன்றில் மட்டுப்படுத்துதல்.
Sobri us, a, um. *Sobre*, உணவில்-, பானத்தில்மட்டுள்ள.‖ மட்டு-, அடக்கம்-,ஒடுக்கம்-,திட்டம்-, நிதானமுள்ள.‖ வெறி-,மயக்கமில்லாத,-அற்ற,தெளிந்தபுத்தியுள்ள:— vicus சாராயக்கடையில்லாதநகரப்பங்கு, —uva வெறிகொடாததிராட்சம்,—rura கொடிமுந்திரிகை விளையாதநிலங்கள்.‖ *Vigilant*, விழிப்பு-, சாக்கிரதை-,கவனம்-,விவேகமுள்ள.
Soccat us,a,um. *Qui porte des brodequins*,பாதுகமுள்ள,-தொட்டிருக்கிற.
Soccifer,a,um,*V.*Soccatus.‖ *De comédie*,நாடக.
Soccul us,i,*m.dim. ex*

Socc us, i, *m. Brodequin*, பாதகரப்பு, பாதுகை.‖*Comédie*, நாடகம்.

Socer,—r us,i, *m.Beau-père*, மாமன், மாமனார், மாதுலன்.

*Socer a,æ,*f. V.* Socrus.

Soci a, æ, *f. Femme*, பெண்சாதி.‖*Compagne*, தோழி, துணைவி.

Sociabil is,is,e. *Qu'on peut réunir*, கூட்டத்தக்க.‖*Sociable*, இணக்கம்-, நட்புள்ள, கூட்டத்து, கூடச்சஞ்சரிக்க-, சேரத்தக்க,பொருந்துகிற.

Social is,is,e.*Des alliés*, கூட்டாளிகளின். ‖ *De la société*, கூட்டத்து, கூடச்சஞ்சரித்தலின்.‖*Conjugal*, சமுசாரத்து:—carmina விவாக-, சோபனப்பாட்டு,-வாழ்த்து.‖*V.*Sociabilis.

Socialita s,tis,*f.Familiarité*, பழக்கம்,இணக்கம்,தோழமை, சகவாசம்.

Socialiter,*adv. En bon ami*, நல்லசிநேகிதன்-தோழனாய்.‖ *En associé*, கூட்டாளியாய், பங்காளிமுறையின்படி.

Sociatio,nis, *f. Association*, கூட்டம்,சங்கம், ஒன்றிப்பு.

Sociator,is,*m.*—tri x,cis, *f.Qui allie*,கூட்டுகிறவன்,சேர்க்கிறவன்,ஒன்றிக்கிறவன்,-வள்.[தோழன், துணைவன்,நேசன்.

Socien us—ne us, i,*m. Camarade*,

Societa s, tis, *f. Société*, கூட்டம், சங்கம், கும்பல்,சபை,கூடச்சஞ்சரிப்பு.‖ *Union*,பொருத்தம், சம்பந்தம், இணக்கம்,உடன்பாடு: —nominum பேர்களின் ஒப்பு,—periculi கூடஆபத்துக்களுக்குள்ளாதல்,in societatem laudum venire கூடப்புகழப்படுதல். ‖ *Allianee*, ஐக்கியம், உடன்படிக்கை, உடன்தை,பந்துகட்டு,சங்கேதம்,ஒருமிப்பு.

Soci o...are,*v.a. Joindre*,கூட்டுதல், சேர்த்தல், ஒன்றித்தல், இணக்குதல், இணைத்தல்,பொருத்துதல்:—domo வீட்டிற்சேர்த்தல், —dextras ஒப்பந்தக்குறிப்பாகக்கைதொடுதல்,— manus alicui ஒருவன்ஒத்தாசைக்குவருதல், — cubilia கூடப்படுத்தல்,விவாகம்பண்ணுதல், — sanguinem கொள்வினைகொடுப்பினைபண்ணுதல், — parricidium பிதாவதைக்குப்பத்துகட்டுபண்ணுதல்,—sociari கூடுதல். [*son allié*, கூட்டாளியையஏய்க்கிற.

Sociofraud us, a, um.*Qui trompe*

Soci us,i,*m. V.* Socienus: —consilii கருத்துக்கு அந்தரங்கனானவன், — culpæ உடன்குற்றவாளி, — sanguinis உறவன், இனத்தான், —tori புருஷன்.‖ *Allié*, ஐக்கியம்-,துணை-, ஒத்திக்கையானவன்,உடன்படிக்கைத்தகாரன். ‖ *Associé*, கூட்டாளி,பங்காளி.

Soci us, a, um. *De société*, கூட்டத்து.‖*Commun*, பொது-, பங்கான: —templum இருவர்வணங்கப்படுங் கோயில், — regnum இருவர்-,அநேகராளு மி ராச்சியம்,—lectus சமுசாரக்கட்டில்,—sanguis உறவு.‖*D'allié*, கூட்டாளியின், துணைவரின்:—agmina துணைப்படை,socià nocte இரவின்மூலமாக.

Socordi a,æ,*f. Sottise*, மூடத்தனம், பேதைமை.‖*V.*Pigritia.

Socordi ter,ùs, *adv. Négligemment*, அசட்டை-, சோம்பல்-,கோழையாய்.

Socor s,dis,*o.g.gen. Sot*,மடைய,பேதையான.‖*Indolent*, சோம்பல்-, அசட்டையான, கோழைத்தனமுள்ள, சாக்கிரதை-,கவலையற்ற.

Socrat es,is, *m. Socrate* என்பவன்; Socratic us,a, um.*De Socrate*,சொஅவனது. [யாருடைய.

*Socrual is,is,e. *De belle-mère*,மாமி

Socr us,ûs,*f.Belle-mère*,மாமி, மாமியார்.

Sodal is,is,*m.f.Camarade*, தோழன், -ழி, துணைவன்,-வி,சிநேகிதன்,-தி.‖*Collégue*,துணையாளி,தொழில்-, உத்தியோக-,பட்டக்கூட்டாளி.‖ *Confrère*, சபையான்,கூட்டத்தான்.

Sodalita s,tis,*f.Société de plaisir*,சந்தோஷத்துத்தோழமை.‖ *Intimité*, இணக்கம், உற்றசிநேகம்.‖ *Confrérie*, சபை,கூட்டம்.

Sodaliti um,i, *n. Société*, சிநேகிதர்கூட்டம்.‖*Repas de confrérie*,சபையார்விருந்து.‖*Conciliabule*, தகாதகூட்டம். ‖ *Brigue de suffrage*, அபமதிச்சீட்டுவாங்குதற்கான உடந்தை,-பிரயாசம.‖ *V.* Sodalitas.

Sodaliti us, a, um. *De confrérie*, சபையின்,கூட்டத்து. [(*Prusse*) சனம்.

Soderan i,orum, *m. pl. Sodérans*;

Sodes,*P.*Si audes.‖*De grâce*, அருளும், தயைசெய்யும்.

Sodom a, æ, *f. Sodôme*,(*Palestine*) நகர்;Sodomi a,æ,*f.Sodomie*, சொதகமபாவாக்கிரியம், ஆண்புணர்ச்சி; Sodo-

mit æ,arum,*m.pl.Sodomites*, ஷொதகரத்தார்,ஷொபாவாக்கிரமிகள்; Sodomitic us,a,um.*De Sodôme*,ஷொதகரத்து.

Sogdian a,æ,*f.Sogdiane*,(*Turquestan*)தேசம்;Sogdian i,—di i,orum,*m. pl.Ses habitans*,ஷொதேசத்தார்.

Sol,is,*m.Soleil*,சூரியன், ஆதித்தியன், ஆதித்தன்,ஞாயிறு,இரவி, பானு, அருணன்,உதயன், அருக்கன்.‖ வெயில், சூரியக்கிரணம்,-கதிர்: — adustus மத்தியானத்துச்சூரியன், —uterque சூரியன்உதயமும்அஸ்தமிப்பும், sole primo காலமே,— medio மத்தியானத்தில்,—supremo சாயங்காலத்தில், in sole வெயிலில், solibus aptus வெயிலிற் குளிர்காயவேண்டிய.‖*Jour*,பகல், நாள், தினம்;Solis mons, *Cap Cantin*,(*Maroc*) மூந்தல், — dies ஞாயிற்றுக்கிழமை, ஆதித்தியவாரம்.

Solabil is,is,e,*V.*Consolabilis.

Solag o,inis, *f.V.* Helioscopius.

Solam en,inis,*n.Consolation*,ஆறுதல்,தேற்றரவு,ஆறல்,துயர்த்தணிவு.

Soland us,a,um.*A consoler*, ஆறுதல்செய்ய-,ஆற்றவேண்டிய.

Solan um,i,*n.Morelle*,ஓர்புல்.

Solan us,i,*m.V.* Subsolanus.

Solan us,a,um,—lar is,is,e.*Solaire*,சூரிய:—herba,*V.*Caltha, Helioscopius.

Solari um,i,*n. Terrasse*, மெத்தை, அரமியம்,உப்பரிகை.‖*V.* Sciothericon.

Solari us,a,um,*V.*Solanus.

Solatiol um,i, *n.dim.ex*

Solatio,nis,*f.*—ti um,i,*n.V.* Solamen: — ferre, solatio levare,esse ஆறுதல்செய்தல், — annonæ பஞ்சத்திலடைமானம்.‖*Dédommagement*, பரிகாரம், நஷ்டப்பரிகரிப்பு.

Solator,is,*m.V.* Consolator.

Solat um,i, *n. Coup de soleil*,கானல்-, வெயில்பட்டதின்நோய், கோடைக்கொப்புளம்.

Solat us, a, um. *Qui en a reçu un*, ஷொநோய்- கொப்புளமுள்ள.‖ *part.ex* solo *et* solor.

Solbustrell a,æ,*f.V.*Pimpinella.

Soldanell a,æ,*f.Soldanelle*, மருந்துக்குரியஓர்பூண்டி.

Sold um,i,*n.V.* Solidum.

Solduri us, i, *m. Brave*,(ஓர்பிரபுவின்)சேவகவீரன்.

Sold us,i,*m.Pièce d'or*, பொற்காசு.‖ *Schelling*, அரைரூபாய்.

Sole a,æ,*f.Sandale*,(வீட்டிலேபோடும்)செருப்பு,கழல்,சப்பரத்து,பரப்பாச்சி, மிதியடி: —ferrea இலாடம், soleas jumentis inducere குதிரைகளுக்குஇலாடங்கட்டுதல்.‖*Sole*, குதிரைக்குளம்பு,குரம்.‖எருமைநாக்குமுதலிய தட்டைமீன்.‖ *Entrave*,தளை,கால்விலங்கு. ‖ *Pressoir à huile*,செக்கு.‖*Semelle*,அடித்தோல், அ

Solear is,is,e, *V.* Sandaliaris. [டி.

Soleari us,i,*m.V.* Sutor.

Soleat us,a,um.*En pantoufles*,பரப்பாச்சியுள்ள,- தொட்டிருக்கிற.

Solemn e,is,*n.Solennité*,திருநாள்,-விழா,பண்டிகை.‖கொண்டாட்டம், ஆடம்பரம்,சிறப்பு.‖*Rit*, வேதாசாரம், முறைமை,ஆசாரம்.

Solemn is,is,e. [*Solennel*, ஆடம்பரம்-,சிறப்பு-,கொண்டாட்டமான.‖ *Habituel*,வழக்கமான: solemne habeo எனக்குவழக்கமாம். [*malité*,முறை,ஒழுங்கு.

Solemnita s,tis,*f.V.*Solemne.‖*For-*

Solemniter,—tùs, *adv. Solennellement*,ஆடம்பரம்-, கொண்டாட்டம்-, சிறப்பாய்,பண்டிகையாய்.

Solen, is, *m. Tuyau*,குழல்.‖ *Canal*, வாய்க்கால்.‖ *Gouttière*, கூடல்வாய், கான்.‖*Boîte ronde*, உடைத்துபொருத்தப்பட்டஉறுப்பைநீக்கிப்படுத்தும் வட்டமானபெட்டி.‖ *Esp.de poisson*,ஓர்விதகடல்மீன்.‖*V.*Concha.

Sol eo, es, ui, *vel* itus sum, ere, *v. n.Avoir coutume*, வழக்கம்-, வரடிக்கையாயிருத்தல்,-கொண்டிருத்தல், வழங்குதல்: ut solet வழக்கத்தின்படி,— cum aliquo ஒருவனோடுதொடுப்பாயிருத்தல், soleo எனக்குவழக்கமுண்டு,-ஆம்.

Soler s,tis,*o. g.* tior, tissimus,*gen. dat. Adroit, fin*, சூகூதம்-, சாமர்த்தியம்-,திறமை-,உபாயமுள்ள, கெட்டிக்காரனை, அறிஞ:— ambagibus சிக்குப்படுத்தச்சூகூமுள்ள,மிகுந்தஉபாயதந்திரமுள்ள,— saxo ponere கெட்டிக்காரனைசித்திரகன்.

Solert er,iùs, issimè, *adv. Adroitement*, சூகூதம்-, சாமர்த்தியம்-,உபாயம்-,விவேகமாய்,கெட்டிக்காரனாய்.

Solerti a,æ,*f.Adresse*,சூகூதம், சாமர்த்தியம்,திறமை,கெட்டித்தனம்.‖*Artifice*,உபாயம்,உபாயதந்திரம்,சூது.

Sol es,is,*f.Solia,(Cypre);Sole,(Cilicie)* நகர்.

Solia,æ,*f.Buglose,*ஓர்கீரை.

Soliar,is,*n.Coussin,*தலையணை.

Soliar is, is, e. *Du siége d'un bain,* ஸ்நானஆசனத்து.

Soliari us, i, *m. Faiseur de pareils siéges,*ஷேஆசனங்களைச்செய்பவன்.

Solican us,a, um. *Qui chante seul,* தனியேபாடுகிற.

Solidam en,inis,*n.Ce qui consolide,* பல்-,உறுதிப்படுத்துகிறது.

Solidament um,i, *n. Partie solide,* (சரீரத்தின்)உறுதியானபங்கு.[த்தமான.

Solidari us,a,um.*Entier,*முழு,மொ-

Solidatio,nis,*f.Fondation,*அஸ்திவாரம்,-போடுதல்.‖*Affermissement,* உறுதிப்பாடு,ஸ்திரம்,திடன்,ஸ்திரப்படுத்துதல்

Solidator,is, *m.*—tri x, cis, *f. Qui consolide,*உறுதிப்படுத்துகிறவன்,-வள்.

Solidè,*adv. Solidement,* உறுதி-பலமாய்.‖*Entièrement,*முழுதும்,அற,சம்பூரணமாய்.

Solidesc o,is,ere,*v.n. Se consolider,* உறுதி-,ஸ்திரம்-,கடினம்-,கெட்டி-,உரமாதல்,பல-,உறுதிப்படுதல்.

Solidipe s,dis, *o. g. Qui a la corne du pied non fendue,* ஒற்றைக்குளம்புள்ள,குளம்புபிளவாயிராத.

Solidita s,tis,*f.Solidité,*உறுதி,ஸ்திரம்,கெட்டி,பலம்,திடம்,நிலை.‖ *Intégrité,* முழுமை,பிரியாமை:soliditates சண்ணாம்போடும்வரைத்தசெங்கல்லோடுங்கட்டிடப்பளிங்குக்கல்லால்மூடிய வீட்டின்மெத்தை.

Solid o...are, *v.a.Fortifier,*உறுதி-,ஸ்திர-,திட-,கடினப்படுத்துதல்.‖ *Souder,* பற்றவைத்தல்,ஒட்டுதல்.‖*Remettre,* பொருத்துதல்,இசைத்தல்.‖*Etablir par une loi,*கட்டளையால்ஸ்தாபித்தல், நிர்மாணித்தல்.‖ *V.* Conforto.‖Solidari,*pass. ex* solido.‖*Etre soldé,*சம்பளங்கொடுக்க-செலுத்தப்படுதல்.‖—*conclu,*நிர்மானமாதல்.

Solid um,i,*n.Terre ferme,*பூமி,தீவல்லாததேசம்.‖ *Totalité,* முழுத்தொகை.‖*V.*Salarium.

Soliduri us,i,*m.V.*Soldurius.

Solid us,a,um.*Massif,*கெட்டியான, போல்-, குடைவல்லாத:— auro statua கெட்டிபொன்சிலை.‖*Entier,* முழு, குறையற்ற,பூரண: in solidum முழுமைக்கு,மற்றவர்கள்தப்பஒவ்வொருவன்முழுத்தொகைக்கு(உத்தரவாதி).‖*Solide,* உறுதி-,ஸ்திரம்-,திடம்-,ஸ்திரியம்-, கடினமான.‖*Assuré,*நிச்சயம்-,உண்மையான.

Solid us,i,*m.V.*Soldus.

Solifer,a,um.*Qui porte le soleil,*சூரியனைச்சுமந்திருக்கிற:— plaga உஷ்ணசக்கரபூமி,கிழக்கு. [மூவிருப்புவேல்.

Soliferre um,i,*n. Javelot de fer,* மு

Solifug a,æ,*f. V.*Solipuga.

Soligen a,æ,*m.f. Né du soleil,*சூரியனுற்பிறந்த.

Soliloqui um,i,*n.Soliloque,*தன்னோடுபேசுதல்,தற்பேச்சாகுகிறபேச்சு,மனோபாஷிதம். [ற்பேச்சாகுகிற.

*Soliloqu us,a,um.*Qui parle seul,* த

*Solin um,i,*n.Repas ou l'on est seul,* தனியாயுண்ணும்அசனம்.

Solipug a,— pung a,æ, *f. Esp. de fourmi,*வெயிலால்அதிககெட்டதாகிற விஷஎறும்பு.

Solisterni um,i,*n.V.*Lectisternium

Solistim um,i,*n.Esp.d'augure,* திருக்கோழிவாயினின்றுதானியம்-, மரம்-,பாறைவிழுந்தசகுனம்(அஞ்ஞானம்).

Solitan æ,arum,*f.pl. Esp.de limaçons,*அப்பிரிக்காக்கண்டநத்தைகள்.

Solitane us,a,um.*Ordinaire,* வழக்கமான,வழங்குகிற. [கமான,வெளிப்படாத

Sôlitane us,a,um.*Secret,* அந்தரங்

Solitari us,a,um.*Seul,*தனி-,பிரத்தியேகமான:—modo மாத்திரமே, — imperium கொடுங்கோன்மை.‖ *Solitaire,* ஏகாந்த,தனிமையான, தனியேசஞ்சரிக்கிறவனி,இருஷி,வனவாசி,ஏகாங்கி.

*Solita s,tis,*f.Isolement,* தனிமை, ஏகாந்தம்,ஏகாந்தசீவியம்.

Solitaurili a,um,*n.pl.Esp.de fêtes,* மூமிருகங்களைப் பலியிடுந்திருவிழா. ஐலைத்துவருஷத்துக்குவந்ததாம்.

Solitè,*adv.En particulier,*தனியாய்.

Solit o...are,*v.n.freq. ex* soleo.

Solitud o,inis,*f.Solitude,*தனிமை,ஏகாந்தம்,அந்தரங்கம், வனம், வனாந்தரம்.‖*Délaissement,* கைத்தெளிந்தல்,-விடுகை,தள்ளுபடி, அநாதம்,உதவியின்மை.

Solit us,a,um,*part.ex* soleo. *Qui a coutume,*வழக்கம்,வாடிக்கையுள்ள.‖*Ordinaire,*வாடிக்கை-, வழக்கமான, வழங்

குறை: præter solitum வழக்கத்தப்பி.

Soli um,i,*n.Trône*, சிங்காசனம், சிம்மாசனம், பத்திராசனம், இராசாசனம், உயர்ந்தஆசனம்.‖*Chaise*, நாற்காலி.‖*Siége de juges*, நியாயாதிபதிகள் ஆசனம்.‖*Baignoire*, ஸ்நானதொட்டி.

Solivag us,a, um. *Qui erre seul*, தனியேதிரிகிற:— cognitio பலனற்றஅறிவு

Solla x,cis,*m.Tigre*, (*Assyrie*), நதி.

Solliac um,i,*n.Sully*,(*France*)நகர்.

Sollicitatio,nis,*f. Sollicitation*, கெஞ்சுதல், மன்றாட்டு, அழைப்பு, தூண்டுகை, ஏவுதல்.

Sollicitator,is,*m.*—tri x,cis,*f. Solliciteur*, கெஞ்சுகிறவன், அழைக்கிறவன், ஏவுகிறவன், இழுக்கிறவன்,- வள்.‖*Séducteur*, தின்மைக்குட்படுத்துகிறவன், கெடுக்கிறவன்,-வள்.

Sollicit ė, } iùs, issimè, *adv. Avec*
Sollicitò, } *soin*, சாக்கிரதை-, கவனமாய்.

Sollicit o...are,*v.a.Ebranler*, அசைத்தல், குலுக்குதல், ஆட்டுதல்: —forem கதவைத்திறத்தல், —spiculum வேல்சுழற்றுதல், —humum பூமியுழுதல், — alvum purgatione பேதிக்குக்குடித்தல்.‖*Solliciter*, அழைத்தல், இழுத்தல், இழுக்கத்தூண்டுதல், ஏவுதல், கெஞ்சுதல், மன்றாடுதல், தூண்டுதல்: —votis வேண்டுதலினால்அலட்டுதல், — judicium donis இலஞ்சத்தால் நடுவனைத்தன்பாரிசமாக்குதல்.‖*Irriter*, கோபமூட்டுதல், -தூண்டுதல்.‖ *Tourmenter*, கலங்கிப்படுத்துதல், அலட்டுதல், வாதித்தல்: —pacem சமாதானங்கலைத்தல்.‖*Soigner*, விசாரித்தல், கவனித்தல்.

Sollicitud o,inis,*f. Sollicitude*, கவலை, விசாரம், சிந்தனை, கிலேசம்.‖ சாக்கிரதை, கவனம்: sollicitudinibus exedi விசாரமிகுதியால்மெலிதல்.‖*La Sollicitude* என்பவள், வெனுஸ்என்பவளின்தோழி.

Sollicit us, a,um,ior,issimus.*Agité*, அசைக்கப்பட்ட, ஆட்டம்-, நடுக்கம்-, அலைவுள்ள.‖*Inquiet*, கவலை-, விசாரம்-, கிலேசமுள்ள: — ex, de, in, pro re யாதொன்றைக்குறித்து விசாரப்படுகிற.‖ *Qui chagrine*, கிலேச-, விசாரப்படுத்துகிற, அலட்டுகிற, கவலைவருவிக்கிற:— oratio பிரயாசத்தோன்றிய பிரசங்கம்.

*Sollicurio,nis,*m.*— ri a,æ,*f. Curieux*,— *se*, சகலமும்அறிய ஆசிக்கிறவன், -தேடுகிறவன்,-வள்.

*Soll us,a,um. *Entier*, முழு.

Sol o...are,*v.a. V.* Vasto, Insolo.

Soloc e,es,*f.Séleucie* என்னுநகர்.

Solœcism us,i,*m.* } *Solécisme*, சொல்-, இலக்கண-,
Solœc um, i, *n.* } வசன-, விதிவழு,-பிழை, தப்பு, கொச்சை.

Solœcist a,æ, *m. Qui en fait*, வழுபிழைசெய்கிற.

Solœcophan es,is,*m. Qai paraît un solécisme*, வழுவாய்த்தோன்றுகிற.

Solœc us,a,um. *Qui est un solécisme*, பிழையான, இலக்கணவிதிகளுக்கு ஒவ்வாத,-விரோதமான.

Sol or...ari,*v.d.acc. Consoler*, ஆறுதல்செய்தல், தேற்றுதல், ஆற்றுதல், தணித்தல்:—repulsam,famem மறுப்பின் கஸ்தியை-, பசியைஆற்றுதல்.‖*Secourir*, உதவிசெய்தல்.

Solo x,cis,*o.g. Non tondu*, மயிர்கத்தரிக்கப்படாத.‖*Laine grasse*, கழுவாத ஆட்டுமயிர்.

Solpug a,æ, *f. V.* Solipuga.

Solsequi a,æ,*f.*—qui um, i, *n. V.* Helioscopius.

Solstitial is,is,e:*Solstitial*, அயனக்கடைசியின், அயனக்கடைநிலைக்கடுத்த: —orbis, *V.* Tropici,—spina உத்தராயனநடுவிற்புஷ்பிக்கிறமுள்.‖ *D'été*, கோடைகாலத்து.

Solstiti um,i, *n. Solstice*, அயனக்கடைசி, தக்ஷிணாயன-, உத்தராயனக்கடைநிலை, சூரியஅயனத்தின் வடதிசையிலுந் தென்திசையிலும் அதிகதூரமான-, சூரியன்திரும்புகிறவிடம்.‖*Eté*, கோடைகாலம்.

Solubil is, is,e, *V.* Solutilis.‖ *Qui dissout*, எளிதாய்க்கரைக்கிற, -உருக்குகிற.

Solui,*P.*Solitus sum, solvi.

Sol um,i,*n.Sol*, நிலம், தரை, மண், பூமி, தேசம்:res soli காணியாகூலி.‖*Fond*, அடி.‖*Soutien*, ஆதாரம், அஸ்திவாரம், பாதம்:—cereale மேலையாகும்பணியாரம்,—cœleste வானம்,— orationis பிரசங்கத்தின் பிரதானலக்ஷியம்.‖ *Plante du pied*, உள்ளங்கால், உள்ளடி.‖ *Semelle*, (சப்பாத்துமுதலியவற்றின்) அடி.‖*Surface*, பரப்பு, மேற்புறம்.

Solùm, — lummodò, *adv. Seule-*

ment, மாத்திரம், ஒழிய-, அல்லாதே வேறில்லை, ஒன்றே.

Sol us,a,um. *Seul*, ஏக, ஒன்றான, ஒரே, தனி, தனித்த: meâ solius causâ எனக்காகமாத்திரமே. ‖ *Solitaire*, தனிமை-, ஏகாந்தமான, அந்தரங்க:—terræ, loca வனாந்தரங்கள்.

Solutè, *adv. Librement*, கட்டாயமில்லாமல், இஷ்டமாய், வலிய. ‖ *Négligemment*, அசட்டை-, தளர்ச்சியாய். ‖ *V.* Faciliter.

Solutil is,—tibil is,is,e. *Soluble*, கரைய,-தீரத்தக்க, எளிதாய்க்கரைகிற,-உருகுகிற,-பிரிகிற. [விரிவு- தளர்த்தியாய்.

Solutim, *adv. Largement*, தாராளம்-,

Solutio,nis, *f. Act. de délier*, கட்டவிழ்த்தல், தளர்த்துதல். ‖ *Relâchement*, இளக்குதல். ‖ கழிச்சல். ‖ *Dissolution*, கரைவு, பிரிவு, அழிவு. ‖ *Solution*, தீர்த்தல், விளக்கம், தீர்மானம். ‖ *Payement*, கடன்தீர்ப்பு, இறுப்பு.

Solut us,a,um,ior,issimus, *part. ex* solvo:—terra இலேசானபூமி. ‖ *Libre*, கட்டு-, கட்டாயம்-, விக்கினம்-, அடைமானமற்ற, தெளிவான:— os தீர்க்கமான உச்சரிப்பு,— conjugium விவாகமோசனம்,— oratio வாசகம், தளர்ச்சியானவசனநடை, solutior ratio அதிகதருதியான நியாயம். ‖ *Languissant*, தளர்ந்த, சோர்வான, பலவீனம்-, தளர்ச்சியான, வேகமற்ற:—æquor அமரிக்கையானகடல்,—inediâ பட்டினியாய்ச்செத்த. ‖ *Efféminé*, பெண்மையுள்ள, தைரியமற்ற. ‖ *Excessif*, மிஞ்சின, மிதந்தப்பின, கட்டுப்

Solvi, *præt. ex* [பாடில்லாத.

Tertian a,æ,*f. Fièvre tierce*, மூன்றுமுறைக்காய்ச்சல்.

Tertian us,a,um.*De* 3e. *du* 3e. *ordre*,மூன்றுவகுப்பின்,-வரிசையின்,-அந்தஸ்தின்:—febris,*V.*Tertiana; Tertiani ஈ-ம்.பட்டாளச்சேவகர், ஈ-ம். வகுப்புமாணக்கர்.

Tertiari um,i,*n.Tiers*,மூன்றில் ஒருபங்கு.‖— *de livre*, இருத்தலின்மூன்றில் ஒருபங்கு.

Tertiari us,a,um.*Du* 3e.*ordre*,ஈ-ம். தரமான,ஈ-ம். வகுப்பில்- வரிசையிலுள்ள.‖*D'un tiers*, மூன்றிலொருபங்குள்ள: —plumbum மூன்றில் ஒருபங்குவெள்ளீயமுள்ளகாரீயம்.

Tertiatio,nis,*f.* 3e.*reprise, labour, serre*, செய்கிற-,உழுகிற-,அழுக்குகிறமூன்றுமுறை.

Tertiat us,a,um,*part. ex* tertio:—verba தடிக்கப்பட்டசொற்கள்.

Tertic eps,ipitis, *o.g. V.*Triceps.

Terti o...are, *v. a. Tiercer*, ஈ-ம். மூறை-சால்உழுதல்.

Tertiò,—tiùm,*adv. Troisièmement*, மூன்றுவது, ஈ-ம். முறை-விசையாக.

Terti us,a,um. 3e. ஈ-ம், மூன்றும்:—decimus ஐஈ-ம்,—vicesimus உஈ-ம், —regna, numina பாதாளஸ்திரீராச்சியம், -பொய்த்தேவர்கள், tertio quoque die மூன்றுநாளுக்கொருவிசை,nihil est tertium, est quidem tertium நடுவாந்தரத்தில் வேறுபாயமில்லை,- உண்டு,ad tertium, ad tertias மூன்றிலொருபங்கு குறைய,tertii மூவர்.

Tert us,a,um, *V.*Tersus.

Terunci us,i,*m.Cache*,காசு, ஆள்என்னுநாணயக்கால்வாசி: ex teruncio hæres ஆளையின்கால்வாசிக்குச் சுதந்தரக்காரன், teruncii non facere ஒருகாசுக்கும்மதியாதிருத்தல்.

Tervenn a,æ,*f. V.* Taruenna.

Terveneſic us,i,*m. V.* Triveneficus.

Tesqu a, orum, *n.pl. Lieux à augures*, சவனம்பார்க்குமிடங்கள். ‖— *sacrés*, பிரதிஷ்டையானஇடங்கள்: —inhospita வழித்தரங்கள்.

Tesquor,is,*m. V.* Sorditudo.‖ *Friche*, தரிசு.

Tessell a,æ,*f.dim. ex* tessera.‖ *Pièce pour marqueterie*, பலநிறவேலைக்காகசதுரத்துண்டு.‖ *Carreau de marbre*, பாவுதற்காகசதுரப்பளிங்குகல்முதலியது.

Tessellari us,i,*m. Marqueteur*, ஒட்டுவேலை-, பலநிறவேலைக்காரன், -செய்கிறவன்.

Tessallatim, *adv. A pans coupés*, கோடுகோடாய்,துண்டாய்.

Tessellat um,i,*n. Marqueterie*, பலதுண்டு-நிறமானவேலை, ஒட்டுவேலை.

Tessell o...are,*v.a.Marqueter*, ஷே வேலைசெய்தல், ஒட்டுதல். ‖ *Carreler, parqueter*, சதுரக்கல்- பலகைபாவுதல்.

Tesser a,æ,*f. Quadrilatère*, சதுரம், நாலுபக்கமுள்ளவடிவு.‖ *Pièce de marqueterie*, ஒட்டுவேலை,பலதுண்டு-நிறவேலை.‖ *Dé*, கவறு.‖ — militaris ஓர்துண்டின்மேல் எழுதப்பட்ட காவற்குறிப்புச்சொல்,-குழூஉக்குறி, — hospitalitatis இல்விடச்சுதந்தரக்குறிப்பு.‖ *Gage*, அச்சாரம், சுதந்தரக்குறி:— frumentaria தானியம்வாங்குதற்குச்சிட்டு, — nummaria உண்டிச்சிட்டு.‖ *Petite mesure*, இத்தனைவு.

Tesserari us,i, *m. Qui donne le mot du guet*, காவற்குறிப்புச்சொல்நியமிக்கிறவன், -சொல்லுகிறவன். ‖ *Joueur de dés*, கவற்றுச்சூதன், -சூதாடுகிறவன். ‖ *V.* Tessellarius.

Tesserari us, a, um. *De dés*, கவற்[று.

Tesserat us,a,um. *Marqueté*, பலதுண்டு-நிறவேலையாயிய, -வேலையின், கோடுகோடான, சிறுசதுரக்களுள்ள.

Tesserul a,æ,*f. Petit billet pour blé*, தானியம்வாங்குதற்கான சிறுசீட்டு. ‖ *Petite mesure*, சிற்றளவு. ‖ *Pièce de marqueterie*, பலநிற-, ஒட்டுவேலைக்கான சிறுதுண்டு.

Test a,æ,*f. Vase, lampe de terre*, சுடுமண்-, மட்பாத்திரம், மண்விளக்கு. ‖ *Brique*, செங்கல். ‖ *Tuile*, ஓடு. ‖ *Tesson, tét* ஓடு, உடைந்தகலவோடு. ‖ *Ciment*, சுண்ணாம்பு, சாந்து. ‖ *Coquille*, மீனோடு, சங்கு. ‖ எழுதற்கானகிளிஞ்சில். ‖ *Coquillage*, சிப்பி, ஓட்டுமீன். ‖ *Ecaille*, செதின். ‖ *Esp. de castagnettes*, ஓர்விதவாத்திய கோல். ‖ *Esquille*, எலும்பின்துண்டு. ‖ *Petit navire*, மிகவுமிலகுவான சிறுகப்பல். ‖ *Glace*, உறைந்ததண்ணீர். ‖ *Crâne*, மண்டை. ‖ *V.* Lentigo.

Testabil is, is, e. *Capable de tester, de témoigner*, மரணசாதனஞ்செய்ய-, சாட்சியாகத்தக்க.

Testace us,a,um. *De brique*, செங்கல்லின்:—pyra செங்கல்நிறக்கணிகன். ‖ *Testacé*, ஓடுள்ள. ‖ *V.* Testeus.

Testam en,inis,*n. Déposition*, சாட்சி

Testamentari us, i, *m. Qui suppose un testament*, கள்ளமரணசாதனம்உண்டு-செல்லப்பண்ணுகிறவன். ‖ *Notaire*, மரணசாதனம்எழுதுங்கணக்கன்.

Testamentari us,a,um. *Testamentaire*, மரணசாதனத்து.

Testament um,i, *n. Testament*, மரணசாதனம், -சாசனம், சாம்வசனம்:—ruptum செய்தவனழித்த-,—irritum நிறைவேறுத-,—ratum நிறைவேறின மரணசாதனம், testamenti factio cum aliquo ஒருவனுக்காகமரணசாதனஞ் செய்யுஞ்சுதந்தரம்.

Testatim,*adv. V.* Minutatim.

Testatio,nis, *f. Act. de citer en témoignage*, சாட்சியாக அழைத்தல்: —sacra மீறப்படாதவார்த்தைப்பாடு. ‖ *V.* Testimonium.

Testatò,*adv. Après avoir testé*, மரணசாதனஞ்செய்தபின். ‖ *Devant témoins*, சாட்சிகளுக்குமுன்பாக. ‖ *Vu qu'il est prouvé que*, என்றுமெய்ப்பிக்கப்பட்டிருக்க.

Testator,is,*m. Testateur*, மரணசாதனஞ்செய்தவன். ‖ *Témoin*, சாட்சி.

Testatri x,cis,*f. Testatrice*, மரணசாதனஞ்செய்தவள்.

Teste us,a, um. *De terre cuite*, சுடுமண்ணிய, -மண்ணாலான.

Testiculat us,a,um. *A testicules*, பீசமுள்ள. ‖ *part. ex*

Testicul or...ari, *v.d. Accoupler*, புணர்த்தல், பொலிவித்தல். ‖ *Produire des témoins*, சாட்சிக்காரரைஒப்பித்தல்.

Testicul us,i,*m. Testicule*, பீசம், அண்டம், விருஷணம்.

Testificatio,nis, *f. Déclaration*, சாட்சி, வாக்குமூலம்.

Testificat us,a,um, *part. act. et pas.*

Testific or,ari,*v.d. acc. Témoigner*, சாட்சிகொடுத்தல், -சொல்லுதல், நிச்சயித்தல், நிச்சயம்-, உறுதியாய்ச்சொல்லுதல், அறிவித்தல். ‖ *Prendre à témoin*, சாட்சியாக-, சாட்சிவைத்தல், -இடுதல்.

Testimonial is,is,e. *Testimonial*, அத்தாட்சியான, சாட்சிசொல்லுகிற: testimoniales (litteræ) வழிய அத்தாட்சியாகியகாகிதம்.

Testimoni um, i, *n. Témoignage*, சாட்சி, சாகூடி, சாக்கி, வாக்குமூலம், அறிக்கை. ‖ *Certificat*, அத்தாட்சிச்சீட்டு, சிபாரிசு, -பத்திரம்:— tribuere alicui, *vel* alicujus, aliquem testimonio prosequi ஒருவனுக்காகச்சாட்சிசொல்லுதல், —dicere contra, testimonio lædere விரோதமாகச்சாட்சிகொடுத்தல். ‖ *Preuve*, அத்தாட்சி, உருசு, நிஷ்டாந்தம். ‖ *Signe*, குறிப்பு, அடையாளம்.

Test is,is,*m. Témoin*, சாட்சி, சாட்சிக்காரன், அறிகிறவன்:—rei, in rem, de re ஓர்காரியத்துக்குச்சாட்சி. ‖ *Spectateur*, பார்க்கிறவன். ‖ *V.* Testiculus.

Test or...ari,*v.d. acc. V.* Testificor. ‖ *Prouver*, ஒப்பித்தல், காட்டுதல். ‖ *Conjurer*, வேண்டிக்கொள்ளுதல், மன்றாடுதல். ‖ *Tester*, மரணசாதனத்தாவிதல், -சாதனஞ்செய்தல்.

Testu,*n. ind. Vase de terre*, சட்டிமண்-, மட்பாத்திரம். ‖ *Casserole*, சட்டி. ‖ *Four*, உலோட்டிசுடுமிடுப்பு. ‖ *Cloche, moufle*, மணிவடிவானசட்டி, -கல்லம், -எத்

தனம்; Testuace us, a, um. *Cuit sous la cloche,* ஷெசட்டியின்கீழ்வேவிக்கப்பட்ட. ‖ *Fait sous le moufle,* ஷெஎத்தனத்தின்கீழ்செய்யப்பட்ட; Testuati um, i, n. *Gâteau cuit ainsi,* ஷெசட்டியின்கீழ் சுட்டபணியாரம். [ம், தூபிகை.

Testudinat um, i, *n. Dôme,* கும்மட்ட

Testudinat us, — neat us, a, um. *Voûté,* வளைவு-, வில்வடிவு-, கும்மட்டமான

Testudine us, a, um. *De tortue,* ஆமையின், ஆமையோட்டின்,— ஓட்டிலுலான. ‖ *V.* Testudinatus.

Testud o, inis, *f. Tortue,* ஆமை, கூர்மம், உறுப்படக்கி, கச்சபம். ‖ படைக்கேடயச்சேர்க்கையாலாகிறமுடி: — acuta மூப்பன்றி. ‖ *Bélier,* சவரையிடிக்கும்போரியந்திரம். ‖ *Ecaille de tortue,* ஆமையோடு. ‖ *Lyre,* வீணை, யாழ். ‖ *Voûte,* வளைவு, வில்வடிவு, கும்மட்டம். ‖ *Salon,* அலங்காரசாலை, -மண்டபம். ‖ *V.* Vestibulum.

Testul a, æ, *f. Coquille à suffrage,* அநுமதிஎழுதஞ் சிறுசிலிஞ்சில். ‖ *Petite tuile,* சிற்றோடு. ‖ *V.* Ostracismus.

Test um, i, *n. Tuile,* ஓடு. ‖ *Vase de terre,* சுட்டமண்-, மட்பாத்திரம்.

Tet a, æ, *f. Ramier,* காட்டுப்புறு.

Tetanic us, a, um, *V.* Spasmosus.

Tetanothr um, i, *n. V.* Tentipellium

Tetan us, —n os, i, *m. Tétanos,* சன்னி, இசிவுசன்னி. ‖ *Crampe,* இசிவு, வலிப்பு.

Tetartæ um, i, *n.* 4, ச, நாலுஎன்கிறகணக்கு. [quatriduanus.

Tetartæ us, a, um, *V.* Quartanus,

Tetartemori a, æ, *f. Quart de ton,* கால்வாசிசுரம்.

Tetartemori on, i, *n. V.* Quadrans. ‖ *Quart du zodiaque, de cercle,* இராசிமண்டலத்தின்-, சக்கரத்தின்கால்வாசி. ‖ *Quadrat,* சக்கரத்தின்கால்வாசிஅலையானஇருசிரகதீலை.

Tetart on, i, *n. V.* Hemina.

Tetendi, *præt. ex* tendo.

Tet er, ra, rum. *Noir,* கறுப்பான், கரிய. ‖ இருண்ட, இருளுள்ள. ‖ *Horrible,* பயங்கர, அவலகூதண. ‖ *Infect,* தீர்க்கத்த, கெட்ட, அழித்த. ‖ *Cruel,* கொடிய, அகோர. ‖ *Honteux,* வெட்கத்துக்குரிய.

Teterrimè, *adv. V.* Tetrè.

Tethalassomen us, a, um. *Mêlé d'eau de mer,* கடல்நீர்கலத்த.

Tethe a,—thy a, æ, *f. Esp. de coquillage,* ஓர்விதசிப்பி, -சங்கு.

Tethy s, os, *vel* dos, *f.* a. *vel* n. *acc. Téthys* என்பவள், கடலின்பொய்த்தேவதை. ‖ *Mer,* கடல்.

Tetigi, *præt. ex* tango.

Tetin i, erit, isse, *P.* Tenui, erit, isse.

Tetrachord um, i, *n. Accord de 4 tons,* ச-சுரத்திசை. ‖ *Tétracorde,* ச-நரம்புவீணை. ‖ —anni வருஷத்துச-பருவங்களும். [*tons,* ச-நரம்பு-சுரமுள்ள.

Tetrachord us, a, um. *A 4 cordes,* 4

Tetracol on, —col um, i, *n. V.* Tetrastichon. [சரணளவுள்ள.

Tetrador us, a, um. *De 4 palmes,* ச-

Tetradrachm a, æ, *f.* —m um, i, *n. Tétradrachme* என்னுநாணயம், ஏறக்குறைய அஞ்சரை அணுபெறும்.

Tetraedr on, i, *n. Tétraèdre,* ஒப்பான-ச-திரிகோணங்கள்சேர்த்தபொருள்.

Tetraeteri s, dis, *f. V.* Quadriennium. [*Esp. d'araignée,* ஓர்விதசிலந்தி.

Tetragnathi um, i, *n.* —thi us, i, *m.*

Tetragon um, i, *n. Quadrat,* சதுரம், சதுக்கம். [நிகோணமுள்ள.

Tetragon us, a, um. *A 4 angles,* நா

Tetragrammat on, i, *n. Dieu,* தேவன், நாலகூரமுள்ளதேவநாமம்.

Tetralogi a, æ, *f. Tétralogie,* பக்குலஎன்பவன்பண்டிகையின்-ச-வாசாப்பு.

Tetramen us, a, um, *V.* Quadrimensis. [ரடி.

Tetrametr um, i, *n. Tétramètre,* ச-சீ

Tetran s, tis, *o. g. Quart,* கால், காலல்வாசி. ‖ —*de cercle,* சக்கரக்காலல்வாசி. ‖ *Quartier,* பங்கு, கண்டு. ‖ *Point d'intersection des perpendiculaires,* நேர்நீலுயிரேகைகள் குறுக்காகுமிடம். [ரியப்கூறி.

Tetrao, nis, *m. Esp. d'oiseau,* ஓர்பெ

Tetrapharmac um, i, *n. Esp. d'emplâtre,* மெழுகுகொழுப்புபிசின்சிலகலந்தசேர்வை. ‖ —*de salmis,* ச-பதார்த்தக்கலப்பு. [4, நால்வராய்ச்சுமக்கிறவர்கள்.

Tetraphor i, orum, *m. pl. Porteurs à*

Tetrapol is, is, *f. Tétrapole, (Syrie, Attique)* ச-நகரநாடு.

Tetrarchi a, æ, *f. Tétrarchie,* பிரித்தஇராச்சியத்துக்காலல்வாசி, -பங்கு.

Tetrarch a, æ, *m. Tétrarque,* ஷெபத்தின்இராசா, -அதிபதி.

Tetrastich on,—ch um,i, *n.* *Quatrain*, நாலடிபாட்டு, -கவி, விருத்தம்.

Tetrastich us,i,*m.* *Rangée de 4 colonnes*, ச-தூண்வரிசை. [ச-பாட்டுள்ள.

Tetrastroph us,a,um. *A 4 strophes*,

Tetrastyl us,a,um. *Tétrastyle*, வரிசை-, இணையாக-ச-தூணுள்ள.

Tetrasyllab us,a, um. *De 4 syllabes*, ச-அசையுள்ள.

Tetraeteric us,a,um, *De tous les 4 ans*, ச-வருஷத்துக்கு ஒருவிசை ஆகிற.

Tetr ė,iùs, *adv.* *Cruellement*, நிஷ்டூரமாய். ‖ *Indignement*, அடாதவிதம்-, நிந்தையாய். [க்கம்-, கிலேசமாய்.

Tetricė, *adv.* *Avec chagrin*, கலகி-,

Tetricita s, tis, } *f.* *Chagrin*, கலகி-,

Tetritud o,inis, } கிலேசம்-, கோபமுள்ளகுணம்,-முகம், விசனம்.

Tetric us,a,um. *Bourru*, சண்டித்தனம்-, கோபம்-, கலகி-, கிலேசமுள்ள: — Minerva நீதிலதலவாசாலம், — rupes, *vel* tetrica, (*Latium*) செங்குத்தானமலை.

Tetrinn io, is,ire, *v.n.* *Crier*, (வாத்து) கூவுதல், கத்துதல்.

Tetr o,as,are, *v.a.* *V.* Spurco.

Tettigometr a, æ, *f.* *Nid de cigale*, சில்விமுட்டைநிறைத்தது.

Tettigoni a,æ, *f.* *Petite cigale*, சிறுசில்வி. ‖ *Cigale femelle*, பெண்சில்வி.

Tetuli, *P.* Tuli *ex* fero. [கோரை.

Teuchit es,æ, *m.* *Esp.de jonc*, சதுத்த

Teuc er,—c rus,ri, *m.* *Teucer* என்பவன்; Teucri a,æ, *f.* *Troie*, (*Asie*) நகரம். ‖ *Troade*, ஷை நகரநாடு; Teucer,—cr us,—cri us,a,um,—cri s,dis, *f.* *De Teucer*, ஷை அவனது. ‖ *V.* Trojanus.

Teucr i,orum, *m.pl.* *V.* Troiades.

Teucri um,i, *n.* *Esp.de germandrée*, ஓர்வித புல்.

Teumes us,i, *m.* *Teumèse*, (*Béotie*) மலை; Teumesi us,a,um. *De Teumèse*, ஷை மலையின். ‖ *V.* Bœoticus. [ringi.

Teuriochæm æ,arum, *m.pl.* *V.* Thu-

Teutat es,æ, *m.* *Teutatès*, *Mercure* என்பவன், (*Gaule*) பொய்த்தேவன். [டு.

Teuthali s,dis, *f.* *Polygone*, ஓர்புண்

Teuthrani a,æ, *f.* *Teuthranie*, (*Mysie*) நாடு. [*Teuthranie*, ஷை நாட்டு.

Teuthrante us, — ti us,a, um. *De*

Teutoburgiensis saltus, *m.* *Forêt de Teuteberg*, (*Germanie*) காடு.

Teuton es,um,—n i,orum, *m.* *pl.* *Teutons*, (*Germanie*) சனம்; Teutonicus,a, um. *Teutonique*, ஷை சனத்து. ‖ *Germanique*, ஜர்மனியதேசத்து.

Texeli a,æ, *f.* *Texel*, (*Hollande*) தீவு.

Texi, *præt.* *ex* tego.

Tex o,is,ui, *vel* i,tum,ere, *v.a.* *Tisser*, நெய்தல், நெசவுசெய்தல். ‖ *Tresser*, பின்னுதல், தொற்றுதல், அல்லுதல்: —flores பூமாலைகட்டுதல். ‖ *Construire*, கட்டுதல், உண்டுபண்ணுதல், ஏற்படுத்துதல்: texitur nemus quercu காட்டிற்கருவாலிமரமிருக்கிறபாம். [தறியிடம், நெசவிடம்.

Textern a,æ, *f.* *Atelier de tisserand*,

Textil e,is, *n.* *Tissu*, நெசவு, நெய்வு, நெய்தல், பின்னல், புடவை.

Textil is,is,e. *Tissu*, நெய்ய-, பின்னப்பட்ட, நெசவான: —pictura கிலேமேற்சித்திரம், சித்திரத்தையல், — stragulum இரத்தினகம்பளி, — ventus சல்லா.

Textiviliti um,i, *n.* *V.* Titivilitium.

Textor, is, *m.* *Tisserand*, நெசவுக்காரன், நைக்கிளவன், -கோளன், நெய்வான், காருகன். ‖ *Rubanier*, நாடா நெய்கிறவன். ‖ *V.* Acupictor. [சவுக்காரனுடைய.

Textori us,a,um. *De tisserand*, நெ

Textricul a, æ, *f.* *Ouvrière en toile*, நெசவு-, கிலேவேலைக்காரி.

Textrin a,æ, *f.* —n um,i, *n.* *V.* Texterna: — plumaria இறகுவேலைக்காரன்கடை. ‖ *Tissage*, நெசவு, நெய்வு, நைக்கிளவர்-, நெய்கிறவன்தொழில்.

Textrin us,a,um, *V.* Textilis.

Textri x , cis, *f.* *Qui tisse*, நெசவுக்காரி, நெய்கிறவள். ‖ *Qui tresse*, பின்னுகிறவள்.

Text um,i, *n.* *V.* Textile: — vimineum குறவன்பெட்டி, கூடை. ‖ *Drap*, சலாத்து, கிலே: —dicendi tenue தளர்ந்தவசனநடை.

Textur a,æ, *f.* —t us,ûs, *m.* *V.* Textile. ‖ *Liaison*, தொடர்ச்சி, பொருத்தம், சம்பந்தம், இணைப்பு.

Text us,a,um, *part.* *ex* texo.

Text us,ûs, *m.* *Texte*, மூலம், மூலவாக்கியம், வாக்கியம், உதாரணம். ‖ *V.* Textura.

Texùi, *præt.* *ex* texo. [ra.

TH

Thabusi um, i, *n.* *Thabusium*, (*Phrygie*) நகர், கோட்டை.

Thalam æ,arum,*f.pl. Emonctoires du cerveau,* மண்டையில்பிஞ்சின நீரை வெளியேவிடும்துவாரங்கள், -கழலைகள்.

Thalameg us,i,*m. Yatch de plaisance,* உல்லாசத்துக்கான சிறுகப்பல்.

Thalamentri a,æ,*f. V.*Cubicularia.

Thalamepol us,a, um, *V.* Cubicularius.

Thalami a,æ, *f.Thalamie,* (*Thessalie*) நகர்.‖*Trou de rame,* தண்டுக்கான துவாரம்.

Thalamit a,æ, — mi us, i, *m. Rameur mis à bâbord, à la proue,* இடது பக்கத்து-, அணியத்து தண்டுவலிப்பவன்.

Thalam us,i,*m.Chambre à coucher,* சயனவறை.‖ *Lit nuptial,* சமுசாரக்கட்டில்:thalami consors புருஷன்,பெண்சாதி. ‖ *Mariage,* கலியாணம்: thalamos petere கலியாணமாகக்கேட்டல், thalamum eumdem inire கலியாணம்பண்ணுதல்.‖*Trou des rayons de miel,* இறுவின்துவாரம், -அறை. ‖ *Cavité de l'œil,* கண்குழி. [ர்பூண்டு.

Thalassægl e,es, *f.Esp.de plante,*ஓ

Thalassiarch a,æ,*m.Amiral,* கப்பற்கூட்டத்தலைவன். [ற்கூட்டத்தலைமை.

Thalassiarchi a,æ,*f.Amirauté,*கப்ப

Thalassic us, —sin us,a,um. *Vert de mer,* கடற்பச்சைநிறமான.

Thalassio,nis,—si us,i, *m. Hyménée* என்பவன்.‖*V.* Epithalamium.

Thalassit es, æ, *m. Vin plongé en mer,*(பழமையுருசிபெறுதற்கு) கடலில் அமிழ்த்தினஇரசம்.

Thalassi us,a,um, *V.*Maritimus.

Thalassocrator, is, *m. V.* Thalassiarcha.

Thalassomeli,tos, *n.Esp.de purgation,* கடல்நீர்கலந்தநற்சுவைவிரேசனமருந்து.

Thalassometr a,æ,*m.Pilote,*மாலுமி

Thalassueg us,i,*m. V.*Nauta.

Thalass us,i,*m. V.*Thalassio.

Thal es,is,*vel* etis,*m.Thalès* என்பவன், ஓர்ஞானி. [மகள்.

Thali a,æ,*f.Thalie,*நாடகத்தின்கலை

Thalictr um,i,*n.Esp.de renonculacée,*ஓர்பூண்டு.

Thallophor i,orum, *m.pl. Porteurs de branches d'olivier,* (மினேர்வென்பவன்பண்டிகையில்) ஒலிவ்மரக்கிளை தரிக்கிறவர்கள்.

Thall us,i,*m.Branche d'olivier,*இலையுங்கனியுமுள்ள ஒலிவ்மரக்கிளை. ‖ *Tige d'oignon,* வெங்காயத்தாள்.

Thalysi a,orum,*n.pl.Fête des vendanges,*திராட்சங்களைப் பறித்ததின்பண்டிகை. [ஆறு.

Thamar us,i,*m. Thamaro,* (*Naples*)

Thames is,is, *f. V.* Jamesa.

Thamn us,i,*m. Juin,* ஜூன்மாதம்.‖ *Esp.d'arbrisseau,*ஓர்செடி.

Thapsi a,æ,*f.Férule,* ஓர்விதபிரம்பு.

Thaps us,i,*f. Demsas,* (*Tunis*) நகர்; *Thapsus,* (*Sicile*) நகர், தீவு. ‖ *Esp. de bois,*ஓர்விதமரம்.

Thargeli a,orum, *n.pl.Thargélies,* அப்பொல்லோன் தியான் என்பவர்களின் பண்டிகை; Thargeli us,i, *m. Esp. de vase,*ஷைபண்டிகையில்முந்தினவிளைவு பலன்களைவேவிக்கும்பாத்திரம்.

Thargeli on,i,*n. Avril,* (*Athènes*) எப்பிறேல்மாசம்.

Thars is,is, *f.Tharse,*(*Cilicie*) நகர்.

Thass a,æ,*f.Esp.de poisson,*ஓர்மீன்

Thas us,i,*f. Thaso,* (*Archipel*) தீவு; Thasi us,a, um. *De Thaso,*ஷைதீவின்.

Thau,*Thau* என்னும்எழுத்து,யூதரின் நெடுங்கணக்கின் கடைசியாம்.

Thaumac i,orum, *m.pl. Taumaco,* (*Thessalie*)நகர். [*ge,*புதுமைசெய்வோன்

Thaumaturg us,i, *m. Thaumatur-*

Thauma s,ntis,*m.Thaumas* என்பவன்; Thaumantæ us,—tic us,a,um. *De Thaumas,*ஷையவனது; Thaumantia s, —ti s,dis,*f.Iris* என்பவள், அவன்மகள்.

The a,Thei a,æ,*f.Thé,* தேயிலை.

Theamed es,is,*m.Esp.de pierre,* இரும்பைஅகற்றுங்கல்.

Theat e,is,*n.Chiéti,*(*Italie*) நகர்.

Theatin i,orum, *m. pl. Théatins* என்பவர்கள், ஓர்சபைச்சந்நியாசிகள்.

Theatral is,is, e. —tric us, a, um. *De théâtre,* அபிநய-, நாடகசாலையின்.

Theatridi um,i,*n.dim.ex*

Theatr um,i,*n.Théâtre,*நாடக -, அபிநயசாலை,-மேடை,கழகம், அரங்கம்,விசாலமாய்க்காணப்படும்-,உயர்ந்தஇடம். ‖*Spectateurs,*பார்க்கிறவர்கள்.‖*Spectacle,*வேடிக்கை, காட்சி,தோற்றம்.

Theb a,æ,*f.Thèbe,(Cilicie)*நகர்.

Theb æ,arum,*f.pl.*—b e,es,*f. Thèbes, (Egypte,Béotie, Thessalie, Palestine)* நகர்; Thebæ us, — baic us, a, um. *De Thèbes, (Egypte)*ஷெநகரத்து; Thebai s,dis,*f.Thébaïde,(Egypte)* ஷெநகரநாடு.‖ ஓர்காப்பியம். ‖ *Thébaine,* ஷெநகரஸ்திரீ; Theban i,orum,*m. pl. Thébains,* ஷெநகரத்தார்; Theban us, a,um. *De Thèbes,(Béotie)*ஷெநகரத்து.

Thebaic æ,arum,*f.pl.Dattes,*பேரீச்சம்பழங்கள்.

Thebet, *ind.Janvier,* சனவரிமாதம்.

Thec a,æ,*f.Cassette,* சிறுபெட்டி, சிமிழ்,சிமிள்,புட்டில்.‖*Etui,* கூடு, உறை: —calamaria இறகுக்கூடு‖*V.*Ac us,eris

Thecat us,a, um. *Dans un étui,* கூட்டில்-, உறையிலுள்ள.

Thedo,nis,*m. V.* Lampetra.

Theism us, i,*m. Théisme,* தெய்வமுண்டென்கிறபோதனை,ஏகதேவ-,பிரமவாதம். [ஓர்பூண்டு.

Thelygon on,i,*n.Esp. de satyrion,*

Thelyphon on,i,*n.Esp.d'herbe,*தேள்கொல்லும்வேருள்ளபுல். [ஓர்பூண்டு.

Thelypter is,is, *f. Fougère femelle,*

Thema,tis,*n. Thème,* சயபாஷையை மொழிபெயர்த்தல்.‖பிரசங்கப்பொருண்மை,மெய்ப்பிக்கும்-, விளக்கும்வாக்கியம். ‖*V.* Genethliologia.

Themi s,dis,*f.Thémis* என்பவள், நீதியின்பொய்த்தேவதை.

Themist a,æ,*m.Juge,* நடுவன்.

Themiscyr a, æ, *f. Thémiscyre, (Pont)* நகர்; Themiscyræ us, a, um. *De Thémiscyre,*ஷெநகரத்து.

Thens a,æ, *f.V.*Tensa.

Thensaur us,i,*m.V.* Thesaurus.

Theocrati a,æ,*f.Théocratie,* தெய்வீகஇராசாங்கம், -ஆளுகை; Theocratic us, a, um. *Théocratique,* ஷெஇராசாங்கத்து. [தி.

Theodice a,æ,*f.Théodicée,* தெய்வநீ

Theodonis vill a, æ, *f. Thionville, France)* நகர்.

Theœni a,orum,*n.pl.V.* Bacchale.

Theogoni a,æ,*f.Théogonie,(*அஞ்ஞான*)* தேவர்களின்உற்பத்தி,-பிறப்புச்சரித்திரம்,-வமிசஅட்டவணை.

Theologi a,æ,*f.Théologie,*வேதசாஸ்திரம், வேதநூல், தெய்வத்துக்கடுத்தசாஸ்திரம். [வேதசாஸ்திரத்தின்படியே.

Theologicè, *adv. Théologiquement,*

Theologic us, a, um. *Théologique,* வேதசாஸ்திர.‖ *Théologal,* தெய்வத்துக்கடுத்த. [ஸ்திரி,-பாரகன்,-நூலோன்.

Theolog us,i,*m.Théologien,*வேதசா

Theomach us, i,*m.Qui combat contre dieu,*தேவனுடபோராடுகிற.

Theombroti os,i, *f.V.* Semnion.

Theon,is,*m. Théon* என்னும்பழிபாட்டுக்காரன்; Theonin us, a, um. *De Théon,* ஷெஅவனது: dente theonino rodere கடுமையாய்ப்பழித்தல்.

Theophani a,æ,*f.Théophanie,* தெய்வதரிசனை,-காட்சி.

Theopol is,is,*f.V.*Antiochia.

Theorema,tis,*n.Théorème,* சூத்திரம், ஒப்பிக்கத்தக்கவாக்கியம்.‖ *Spéculation,* யோசனை,தியானம்.‖*Précepte,* கட்டளை, விதி. [me, சூத்திரத்து.

Theorematic us, a, um. *De théorè-*

Theoremati um,i,*n.dim.ex* theorema.

Theoretic a,—ri a,æ, —retic e, es, *f.Théorie,* அகரும்-, வெறும்படிப்பு,- உத்தேசிப்பு,-எண்ணம், சாஸ்திரவுணர்வு.

Theoric e,es,*f.Vie contemplative,*தியானிப்புள்ளசீவியம்.

Theoric us, a,um, *V.*Contemplativus.‖*Divin,*தெய்வ.‖ *Théorique,* அகரும், வெறும்படிப்பு-உத்தேசிப்பான, சாஸ்திரத்துக்கடுத்த.

Theotim us, i, *m. Théotime* என்பவன், சர்வேசுரனைவணங்குகிறவன். [மாதர.

Theotoc os,i,*f. Mère de Dieu,* தேவ

Theotoc us, a, um. *Né de Dieu,* சர்வேசுரனுக்குப்பிறந்த.

Ther a,æ,*f.Santorin,(Cyclade)*தீவு; Theræ us,a,um. *De Santorin,* -தீவின்

Theramn æ,—rapn æ, arum, *f.pl.* —rapn e,es,*f.Thérapné,(Laconie)* நகர்;Theramne us, —rapnæ us, a, um. *De Thérapné,*ஷெநகரத்து.‖*V.* Tarentinus,Sabinus, Lacedæmonius.

Therapeut a,æ,*m.Médecin,* வைத்தியன்.‖*Sauveur,*இரட்சகன்.‖ *Moine,*சந்நியாசி,முனி.‖*Prêtre,* குரு.

Therapeutic e,es,*f.Médecine,* வைத்திய-, பரிகாரசாஸ்திரம்.

Theraphim, *V.* Teraphim.

Therarch us,i,*m.* *Grand veneur,* மகாவேடன். [தீவு.

Therasi a,æ,*f.* *Cammini, (Archipel)*

Therat es,æ,*m.* *Veneur,* வேடன்.

Thereutic e,es,*f.* *Vénerie,* வேட்டை, -வித்தை. [விஷகடி-, விஷமருத்து.

Theriac a,æ,—c e,es, *f.* *Thériaque,*

Theriac us,a,um. *Thériacal,* விஷமருத்துக்குரித்த, -மருத்தாகிய.

Therioma,tis,*n.* *Chancre,* ரணம், அழிக்கிறபினவை.

Therionarc a, æ,*f.* *Esp. de plante,* பாம்புகளைத் திமிர்ப்பிக்கும்புணர்.

Theriotrophi um,i, *n.* *Ménagerie,* பலமிருகங்களைவளர்க்குமிடம், -சோலை.

Theristr um,i,*n.* *Habit, voile d'été,* மிகவுமிலேசான-, கோடைகாலவஸ்திரம், -மூக்காடு.

Therm a,æ,*f.* *Therma, (Sicile)* நகர்; —*(Bithynie); Salonique, (Macédoine)* நகர்; Thermæ us,— maic us,a,um. *De Salonique,* ஷெநகரத்து.

Therm æ,arum,*f. pl.* *Thermes,* சூடேறானம்.‖—,*(Thrace)* நகர்:—Himerenses, *Termini;* — Selinuntiæ, *Sciacca, (Sicile)* நகர்,—Stygianæ, *(Toscane)* நகர். [சூடேன்ன.

Thermantic us,a,um. *Echauffant,*

Thermapal a ov a, orum, *n. pl.* *Oeufs mollets,* இலேசாய்வெந்தமுட்டை

Thermari us, i, *m.* *Concierge des bains,* ஸ்நானவீட்டுக்காவற்காரன்.

Thermef acio,acis,eci, actum, acere,*v.a.* *Faire chauffer les thermes,* ஸ்நானநீரைக்காய்ச்சுதல், - வீட்டைஉஷ்ணமாக்குதல்.

Thermin us,a,um, *V.* Lupinarius.

Thermitan us,a, um. *De Thermes, (Sicile)* தேர்ம்நகரத்து.

Thermoclini um,i,*n.* *Bassinoire,* உட்கட்டிலிற்சூடாக்குகிறசட்டி.

Thermodon,tis,*m.* *Thermodon, (Cappadoce)* நதி; Thermodontæ us,-tiac us,—ti us,a, um. *Du Thermodon,* ஷெநதியின். ‖ *Des Amazones,* ஆண்மாரிகளின்.

Thermodot es,æ,*m.* *Donneur d'eau chaude,* ஸ்நானத்துவெந்நீர்வார்ப்பவன்

Thermometr um,i,*n.* *Thermomètre,* நீதோஷ்ணபிரமாணக்கருவி, உஷ்ணத்தளவை.

Thermopol a,æ,*m.* *Marchand de liqueurs chaudes,* உஷ்ணபானங்களைவிற்கிறவன்; Thermopoli um,i,*n.* *Boutique de ces liqueurs,* ஷெபானக்கடை.

Thermopot o, as, are, *v. n.* *Boire chaud,* சூடுள்ளபானங்களை-, சூடாய்க்குடித்தல். [*pyles, (Thessalie)* கணவாய்.

Thermopyl æ,arum,*f. pl.* *Thermo-*

Thermospodi um,i,*n.* *Réchaud,* நீச்சட்டி. [thermæ.

Thermul æ, arum, *f. pl. dim. ex*

Thesaurari us,a,um. *De trésor,* பொக்கிஷத்து.

Thesaurari us,i,—saurens is,is,*m.* *Trésorier,* பொக்கிஷக்காரன், -விசாரணைக்காரன், சம்பிரதி, பண்டாரி.

*Thesauriz o...are,*v.a.* *Thésauriser,* பொக்கிஷங்களைக்குவித்தல், பணத்தை-, ஆஸ்திகளைச்சேர்த்தல், -சேகரித்தல்.

Thesaurochrysonicochrysid es, is, *m.* *Thésaurochrysonicochrysidès* என்பவன், திரவியசம்பன்னன்.

Thesaur us,i,*m.* *Trésor,* பொக்கிஷம், பொக்கசம், திரவியம், பண்டாரம், புதையல், சேமம், வைப்பு.‖ *Coffre fort,* பணப்பெட்டி.‖ *Rayon de miel,* தேனிறட்டு.‖ —maxillarum கன்னக்குழி.‖ *Quantité,* மிகுதி, திரள்.

These us,i,eos, *m.* *Thésée* என்பவன்; These us, —sei us,a,um. *De Thésée,* ஷெஅவனது; Thesid es,—seid es, æ, *m.* *Hippolyte* என்பவன், அவன்மகன்; Thesid æ,—seid æ,arum,*m. pl.* *Athéniens,* அத்தேனியர், Thesei s, dis,*f.* *Théséide* என்றகாப்பியம். [சேசனப்புல்.

Thesi um,i, *n.* *Herbe purgative,* வி

Thes is,is,*vel* eos,*f.* *Thèse,* தர்க்கமூலவாக்கியம், ஒப்பிக்க-, விளக்கவேண்டியவிஷயம்.‖ *Proposition,* வாக்கியம்.‖ *Position,* நிலை, இருப்பு.‖ *Genre de déclamation,* குறிலும்வகை.‖ *V.* Problema.

Thesmophori a,orum,*n. pl.* *Fêtes de Cérès,* செரேஸஎன்பவளின்பண்டிகை.

Thesmophor a,æ,*f.* *Législatrice,* கட்டளையிட்டவள்.‖ *Cérès* என்பவள்.

Themothet æ,arum,*m. pl.* *Gardiens des lois,* முறைமைகளைக்காப்பாற்றும்உத்தியோகஸ்தர்.

Thespi æ,arum,*f. pl.* *Thespies, Nécocrio, (Béotie)* நகர்; Thespiac us,—pius,a,um,—piens is,is,e,—piad es,æ,

m.—pia s,dis,*f. De Thespies,* தெஸ்பை நாட்டு,-நகரத்தான்; Thespiad es, um, *f.pl. Muses,* கலைமகளிர்.

Thesproti a,æ,*f. Thesprotie,(Epire)* நாடு; Thesproti us, —t us,a,um, —ti s,dis, *f. De Thesprotie,* தெஸ்பாட்டு.

Thessali a,æ,*f. Thessalie,(Grèce)* தெசலி; Thessalic us,—li us,—l us,a,um, —li s,dis,*f. De Thessalie,* தெசலிநாட்டது

Thessaliot is, is, *f. Thessaliotide, (Thessalie)* நாடு.

Thessalonic a, æ,*f. Thessalonique, Salonique,(Macédoine)* நகர்; Thessalonicens es,ium,*m.pl. Thessaloniciens,* தெசலோனிக்கர்; Thessalonic us,a,um. *De Thessalonique,* தெசலோனிக்கது.

Theta, *n. ind. Théta* என்னும்கிரேக்கெழுத்து. ‖*Signe de condamnation, de critique,* ஆக்கினைத்தீர்வை-,பிழைக்கண்டனைக்குறிப்பு.

Thetic a,orum,*n.pl. V.* Thesis.

Theti s,dis,*f. Thétis* என்பவள். ‖ *La mer,* கடல்.

Theurgi a, æ,*f. Théurgie,* (அஞ்ஞான) தெய்வானதேவர்களோடுசூனியபழக்கம்,-கள்ளச்சம்பாஷணை; Theurgic us,a, um. *De théurgie,* தெய்பழக்கத்தது; Theurg us,i,*m. Esp.de magicien,* தெய்தேவர்களைவருவிக்குஞ்சூனியக்காரன்.

Thiasita s,tis,*f. V.* Sodalitas.

Thisb e, es, *f. Thisbé* என்பவள். ‖ —*Béotie)* நகர்; Thisbæ us, a, um. *De Thisbé,* தெஸ்பநகரத்தது.

Thlasi æ, Thlibi æ, arum, *m. pl. Eunuques,* அண்ணகர்,பேடிகள்.

Thlaspi,*ind,n.*—p i,is,*f.*—pi on,i, *n. Thlaspi,* காட்டுநிலவாகை. [சனம்.

Thoc um,i,*n. Esp.de siége,* ஓர்விதஆ

Thol us,i,*m. Voûte,* வளைவு,வில்வடிவு. ‖*Clef de voûte,* வளைவின்மையக்கல். ‖*Dôme,* கும்மட்டம். ‖ *Coupole,* கும்மட்டச்சிறுதாபிகை, பிள்ளைத்தோரம்பு.

Thomi x,cis,*f. Câble,* கம்பாகம், பெருஞ்சணல்கயிறு. ‖ *V.* Pulvinulus.

Thoracat us,a,um. *Cuirassé,* மார்க்கவசம்மிந்த. [ம்,மேலுறுப்புச்சிலை.

*Thoracid a,æ, *f. Buste,* அரைச்சரூப

*Thoraci um,i,*n. Hune,* பாய்மரமேல்தட்டு. ‖*V.* Propugnaculum.

Thorac a, æ, *f.* } *Poitrine,* மார்பு. ‖
Thora x, cis, *m.* } *Estomac,* குலை. ‖ *Cuirasse,* மார்க்கவசம். ‖ *Vêtement de la poitrine,* மார்புமூடுமெல்லாடை. [ய்.

Tho s,ris,*m. Loup-cervier,* லிங்கிநர

Thrac a,—ci a,æ,*f. Thrace, Roumélie,(Turquie)* நாடு; Thraci us,—cic us, —c us, a,um. *De Thrace,* தெரநாட்டு: —Chersonesus,*Presqu'île de Gallipoli* என்னுங்குறைதீவு; Thrac es,um, *m.pl. Thraces,* தெரநாட்டார்; Thracidi a,orum,*n .pl. Armes à la thracienne,* தெரநாட்டுமாதிரிஆயுதங்கள். [திமிங்கிலம்.

Thran is,is,*f. Esp.de cétacé,* ஓர்வித

Thrasci as,æ,*m. Vent du nord-nord-ouest,* வடகுன்றுவாடை.

Thraso,nis,*m. Fanfaron,* வீம்பன். ‖ *Téméraire,* அதிகதணிகாரமுள்ளவன்.

*Thrasonian us, a, um. *Fanfaron,* வீம்புபேசுதற, தன்னைப்பாராட்டுதற.

Thra x, cis,*o.g. Thrace,* திரேஸனென்னுநாட்டான். ‖ *V.* Threx.

Threc e,es,*f. V.* Thracia.

Threcidic us,a, um: *De gladiateur armé à la thracienne,* திரேநாட்டுமாதிரியாயுதத்தரிக்கிறமல்லயுத்தனுடைய.

Threcisc us,i,*m.dim.ex* threx.

Threici us,a, um, *V.* Thracius.

Threiss a,Tress a,æ,*f. Femme thrace,* திரேநாட்டுஸ்திரீ.

Thren i,orum,*m.pl. V.* Lamentatio. ‖*Plainte,* முறைப்பாடு. [க்கப்பாட்டு.

Threnodi a,æ,*f. Chant plaintif,* அ

Thre x,cis,*m. Gladiateur armé à la thracienne,* திரேநாட்டார்மாதிரியாயுதமுள்ளமல்லயுத்தன்.

Thridaci as,æ,—da x,cis, *f. Mandragore femelle,* பெண்தூதாயி.

Thrip es,um,*m.pl. Vers du bois,* மரப்புழு. [*de*) நகர்.

Throni um,i,*n. Thronium,* (*Locri-*

Thron us,i,*m. Trône,* இம்மராசனம், இக்காசனம், பத்திராசனம், இராசாசனம்: Throni, *Les Trônes,* பத்திராசனர்.

Thryalli s,dis, *f. Esp.de bouillon,* ஓர்பூண்டு, அதினிலைவிளக்குத்திரியாம்.

Thul e,es,*f. Thulé, (Schetland)* தீவு.

Thunn us,i,*m. V.* Thynnus.

Thurari us, i, *m. Marchand d'encens,* சாம்பிராணி-,பரிமளவருக்கவர்த்தகன். ‖*Leur rue, (Rome)* தெவர்த்தகர்வீதி. [ணியின், குமஞ்ச.

Thure us,a, um. *D'encens,* சாம்பிரா

Thuribul um,i,*n.Encensoir*, தூபக் கலசம்,-கால்.‖ ஓர் தாரகணம்.

Thuricrem us,a,um. *Qui brûle,où l'on brûle de l'encens*, தூபங்காட்டுகிற, – காட்டப்படுகிற.

Thurifer,a,um. *Qui porte l'encens*, சாம்பிராணி–,குமஞ்சத்தருகிற,-உண்டாகிற.‖*Qui encense*, தூபங்காட்டுகிற.

Thuriferari us,i, *m. Thuriféraire*, தூபக்கலசக்காரன், – கலசங்கொண்டு போகிறவன், தூபங்காட்டுகிறவன்.

Thurificator,is,*m.Qui encense*, தூபங்காட்டுகிறவன்.

Thurileg us, a, um. *Qui recueille l'encens*, சாம்பிராணிசேர்க்கிறவன்.

Thuringi a,æ,*f.Thuringe*,(*Allemagne*)நாடு;Thuring i,orum,*m.pl. Thuringiens*,ஷைநாட்டார்.

Thuri i,orum,*m.pl.*—ri um, i, *n. Thurium,Sybaris*, (*Lucanie*)நகர்;Thurin us,a,um. *De Thurium*,ஷைநக.

Thu s,ris, *n.Encens*, தூபம், சாம்பிராணி,குமஞ்சம்,தூபவருக்கம்,நறை, ந

Thuscia... *V.*Tuscia... [றும்புகை.

Thuscul um,i, *n. Petit grain d'encens*, சிறுசாம்பிராணிமணி.

Thy a,æ, *f. Thuya*,ஓர்சுகந்தமரம்.

Thyad es, um, } *f. pl. Bacchantes*,
Thyi æ,arum, } வெறிப்பூசாரிச்சிகள்

Thyam is,is,*m.Calamas*,(*Epire*)நதி

Thyas us, i,*m. Danse des bacchanales*,பக்குஸஎன்பவன் பண்டிகைக்கூத்து.

Thyatir a,æ,*f.Thyatire*, (*Mer d'Ionie*) தீவு;—,*Ak-Hissar*, (*Lydie*) நகர்; Thyatiren us,a,um. *De Thyatire*,ஷைநகரத்து,-தீவின்.

Thye um,i,*n. V.* Thus. [மரத்து.

Thyin us, a, um. *De thuya*, துய

Thyit es,æ,*m.Pierre très-dure*, உரல்செய்வதற்குரியவொருகடினகல்.

Thyma,tis,*n.Sacrifice*, பலி.‖ *Victime*, பலிமிருகம்.‖ *Petit apostume*, சிறுகட்டி. [ரீமின்.

Thymall us,i,*m.Esp.de poisson*, ஓ

Thymbr a,æ, *f.Thymbrée*, ஓர்பூண்டு.‖*Thymbra*,(*Troade*)நகர், மைதானம்; (*Lydie*) நகர்;Thymbric us,—bræ us, a, um. *De Thymbra*, ஷைநகரத்து.

Thymbr is,is,*f. Thymbris*, (*Phrygie*) ஆறு. [(*Phrygie*)நகர்.

Thymbri um, i, *n. Thymbrium*,

Thymelæ a,æ,*f.Garou*,ஓர்பூண்டு.

Thymel e, es, *f. Tribune de bouffons*,குரும்பிகளின்மேடை, -தொட்டி.‖ *Orchestre*, கீதவாத்தியக்காரர்இடம்.

Thymelic i,orum, *m.pl. Bouffons*, பகிடிக்காரர்.‖*Musiciens*,(நாடகத்தின்) கீதவாத்தியக்காரர். [டகமேடையின்.

Thymelic us,a,um.*De la scène*, நா

Thymiama,tis,*n. Parfum*, பரிமளம்,சுகந்தவருக்கம்,-குளிகை,நறை, வாசனைத்திரவியம்.

Thymiamateri um, Thymiateri um,i,*n.V.*Acerra. [ய்,-மது.

Thymi on,i,*n. Thymion*, சிவந்தகா

Thym um,i,*n.Thym*,சமுத்திரா, ஓர்பூண்டு; Thymin us,a,um. *De thym*, ஷைபூண்டின்; Thymos us,a,um. *Plein de thym*,ஷைபூண்டுநிறைந்த;thymites, æ,*m.Vin où il y a du thym*,ஷைபூண்டு ஊறினதிராசம்.

Thymi um,i,*n.* } *Verrue*, காய், ம
Thym us,i, *f.* } று, காய்ப்பு. ‖ *V.* Thymum.

Thyn i,orum,*m.pl.Thynes*,(*Bithynie*) சனம்; Thyni a, æ, *f. Thynie*, (*Bithynie*) நாடு.

Thynia s, dis, *f. Thynias*, (*Thrace*) நகர்; (*Pont-Euxin*) தீவு.

Thynn us, i, *m. Thon* என்னுமீன்; Thynnari us, a, um. *De Thon*, ஷைமீனுடைய.

Thyn us,a,um, *V.*Bithyniacus.

Thyn us,i,*m.Anneau*,மோதிரம்.

Thyone us,i, *m. Bacchus* என்பவன்; Thyonian us,a,um. *De Bacchus*, ஷைவனது.

Thyr e,es,*f.Thyre*, (*Argolide*)நகர்.

Thyræ i,orum,*pl.pl.Thyréens*,(*Inde*)சனம். [கதவில்ஒன்று,-ஒற்றை.

Thyroma,tis,*n.Battant*, இரட்டைக்

Thyrsaget æ,arum, *m. pl. Thyrsagètes*,(*Scythie*) சனம்.

Thyrsicul us,i,*m.dim.ex* thyrsus.

Thyrs us,i,*m.Tige*, (பூண்டின்)தால்.‖ *Enthousiasme poétique*, புலவர்மருள்.‖*Thyrse*,வியர்கொடியுமுத்திரிகைக்கொடியுஞ்சுற்றியவேல்;வெறிப்பூசாரிக்கெனக்குரியது;Thyrsiger,a,um.*Qui en porte un*, ஷைவேல்தரிக்கிற.

Thyrsia s,dis,*f.Bacchante*,வெறிப்பூசாரிச்சி.‖*Leur cri*, ஷைபூசாரிச்சிகூவல்.

Thys us ,i,*m.Porc*,பன்றி,வராகம்.

TI

Tiar a, æ, *f.* — r as, æ, *m. Tiare*, (அர்ச். - பாப்புவின்) கிரீடம்,-திருமுடி. ‖ (பேற்சிய)முடி, மகுடம்.‖பாகை.‖ *Bonnet phrygien*,பிரிஜிதேசத்துக்குல்லா.

Tiarat us,a,um. *Qui porte une tiare*,கிரீடத்-, மகுடத்தரிக்கிற.

Tibaren i, orum, *m. pl. Tibarènes*, (*Cappadoce*) சனம்.

Tibe,*P.*Tibi,*ex* tu.

Tiberian us,a,um.*De Tibère*, திபேரென்பவனுடைய. [*tine*) நகர்.

Tiberia s,dis, *f. Tibériade*, (*Pales-*

Tiberin a,æ,*f.V.*Ratisbona.

Tiberin us,i,—r is,is,*m.Tibre*,(*Italie*) நதி; Tiberin us,a, um. *Du Tibre*, நதியின்: —campus போர்ப்பியாசக்களம்,—Ostia,*n.pl.V.*Ostia;Tiberinis, dis,*f.V.*Tibricola.

Tiberi um,i,*n. Esp. de marbre*,புள்ளியுள்ளசாம்பல்நிறப்பளிங்குகல். [ன்.

Tiberi us,i, *m. Tibère* என்னுமிராம

Tibi,*dat.ex* tu.

Tibi a,æ,*f.Tibia*,குதிரைமுகம்,காலின்திகபெரியவெலும்பு. ‖ *Jambe*, கால்.‖ *Flûte*,குழல்,இன்னிசை-,ஊதுகு-,இசைக்குழல்.‖*Poème lyrique*,யாழுக்குரியகாப்பியம்.

Tibial e,is,*n.Bas*,கால்மேற்சோடு,சரணகோசம்.‖ *Bottine*, சிறுதோற்பரம்

Tibial is,is,e.*Bon à faire des flûtes*, இன்னிசைக்குழல் செய்வதற்குரிய.‖*De jambe*, காலின்.‖*V.*Tibinus.

Tibiari us,i,*m. Faiseur de flûtes*, இன்னிசைக்குழல்செய்பவன். [லோடு.

Tibiatim,*adv. Sur la flûte*, நெகுழ

Tibic en,inis, *m. Etançon*, முட்டுக்கால், ஆதரவு.‖*V.*Tibicinator.

Tibicid a,æ,*m.f. Qui frappe sur les jambes*, காலெலும்புகளின்-,காலின்மேல் அடிக்கிற.

Tibicinator,is,*m.*—cin a,æ,*f. Joueur*,—*se de flûte*, இன்னிசைக்குழலூதுகிறவன்,-வள்.

Tibicini um,i,*n.V.*Fistulatio.

*Tibicin o...are, *v. n. et a. Jouer de la flûte*, இன்னிசைக்குழலூதுதல்.‖ *V.* Fulcio. [க்குழலின்.

Tibin us,a,um.*De flûte*, இன்னிசை

Tibisc us,i,*m.Theiss*,(*Hongrie*),நதி. ‖*Témesvar*, (*Hongrie*)நகர்;Tibisen us, a,um.*De la Theiss*,நெதியின்.

Tibricol a, æ, *m. f. Qui habite les bords du Tibre*, திபெரிலைன்னு நதிக்கரையில்வசிக்கிறவன்,-வள்.

Tibrin us,a,um,*V.*Tiberinus.

Tibr is,is,*m.V.* Tiberinus.

Tibul us,i,*m.Esp. de pin*, ஓர்மரம்.

Tibur,is,*n.*—burn us,i, *m. Tivoli*, (*Italie*) நகர்;Tibur s,tis,—burtin us, —burti us,—burn us,a, um. *De Tivoli*, நெ நகரத்து.

Tichobat es, æ, *m. Qui escalade un mur*,ஏணியைக்கொண்டுசுவர்-, சுவர்மேல்ஏறுகிறவன்,சுவர்தாண்டுகிறவன்.

Ticin um,i, *n. Pavie*, (*Lombardie*) நகர்;Ticinens is,is,e.*De Pavie*,நெநகரத்து.

Ticin us,i,*m.Tésin*,(*Lombardie*)நதி

Tifat a,æ,*f.Tifata*,(*Campanie*) மலை.

Tifern um,i,*n.Tiferne*,(*Italie*)நகர்: —Metaurense,*San-Angélo-in-Vado*; —Tiberinum,*Citta-di-Castello*, (*Italie*) நகர்; Tifernat es, um. *m. pl. Tifernates*,நெ நகரத்தார்.

Tifern us,i,*m.Tiferno*,(*Naples*)நதி.

Tigill um, i, *n. dim. ex* tignum.‖ *Chevron*,கைமரம்,-விட்டம்.‖ *Tuyau de cheminée*, புகைப்போக்குக்குழாய்.

Tigill us, i,*m.Jupiter* என்பவன்.‖*Le soutien du monde*,உலகத்தாங்குகிறவன்

Tignari us,a,um.*De charpente*,வீட்டுமரங்களின்,தச்சவேலையின்:— faber தச்சன்.

Tign um,i,*n.Poutre*, நூலம்,உத்தரம்,விட்டம்.‖ *Pilotis*, பூமியில்தாட்டியிடத்தமரக்கட்டை: jus tign i immitten di: அடித்தசுவர்மேல்தன்வீட்டுத்தரந்தாங்கவைக்குஞ்சுதந்தரம். ‖ *V.* Pedamen. [நகர்.

Tigranocert a,æ,*f. Séred*,(*Arménie*)

Tigrifer,a,um.*Qui porte des tigres*, புலிதரிக்கிற,-உள்ள,-பிறப்பிக்கிற.

Tigrin us,a, um.*De tigre*, புலியின்: —mensæபுலியின்புள்ளியுள்ளமரமேசை.

Tigr is, is,*vel* idis,*m.Tigre*, (*Assyrie*)நதி.

Tigr is,is,*vel* idis,*f.Tigre*,புலி,வேங்கை,பெருநரி,நரி, வல்லியம,வெல்லுமர, வயமர:— inanis புலித்தோல்.

Tigurin i, orum, *m. pl. Tigurins, Zurichois, (Suisse)*சனம்; Tigurin us, a,um. *Des Zurichois,* ஷிசனத்து:—pag us,i,*m.vel* Tigur, is, *n. Zurich, (Suisse)*நகர். [*gliamento,(Vénétie)*நதி.

Tilavempt us, —vent us,i, *m. Ta-*

Tilburgi um,i,*n. Tilbury, (Angleterre)*நகர்.

Tili a ,æ,*f.Peau intérieure d'arbre,* மரத்துஉட்பட்டை.‖*Tilleul,*ஓர்மரம்.

Tiliace us,—agine us,a, um,—aris,is,e. *De tilleul,*ஷிமரத்து.

Timac us,i,*m.Timock,(Mésie)* ஆறு.

Timæi,orum,*m.pl.Timéens,(Sicile)* சனம்.

Timæ us,i,*m.Le Timée* என்னும்புஸ்தகம்,பிளத்தோன்என்பவனுண்டாக்கினது. [தி.

Timav us,i.*m. Timavo, (Vénétie)* ந

Timefact us, a, um. *Intimidé,*பயந்த,அச்சமுள்ள,திடுக்கிட்ட.

Tim eo,es,ui,ere,*v. a. et n. Appréhender,* பய-, அச்சப்படுதல், அஞ்சுதல், எங்குதல்:—ne veniat வருவானென்றுபயப்படுதல்,—ut, ne non veniat வராமலிடானென்றுபயப்படுதல். ‖ *Abhorrer,* அருவருத்தல். [படுதல்.

Timescen s,tis,*o.g.Craignant,* பயப்

Timeth us,i,*m.Naso,(Sicile)*நதி.

Timic a,æ,*f.*—c i,orum,*m. pl. Timique,(Mauritanie)* நகர்.

Timid è, iùs, issimè, *adv. Timidement,*கூச்சம்-,பயமாய்,பயத்தை.

Timidita s,tis,*f.Timidité,*பயம், அச்சம், கூச்சம், சங்கோசம், கோழைத்தனம்,தைரியக்குறை,பயங்காளிகுணம்.

Timidulè,*adv.dim.ex* timidè.

Timidul us,a,um.*dim. ex*

Timid us, a, um,ior,issimus.*Timide,*பயம்-, அச்சம்-, கூச்சமுள்ள, கோழை,பயங்காளி, அஞ்சுகிற, பயப்படுகிற, தைரியமற்ற:—ad mortem, mori, Dei சாவுக்கு-, தெய்வத்துக்கு அஞ்சுகிற.

Timol us,i,*m. V.* Tmolus.

Timor,is,*m. V.*Metus:—de illo meus அவனுக்காக எனக்குண்டானபயம், timori esse alicui ஒருவனுலச்சப்பட்டிருத்தல்.‖ *Superstition,* வீண்பத்தி,-பயம்.‖Timores தங்களைக்குறித்துப்பயத்துக்கேதுவானவர்கள்.

Timorat us,a, um. *Timoré,* பய-, தேவபயமுள்ள.

Timothe us,i,*m.Timothée* என்பவன்

Timui,*præt. ex* timeo. [பாத்திரம்.

Tin a,æ,*f.Vase à vin,* ஓர்விதமானசப்

Tinc a,æ,*f.Tanche,* கிறைமீன்.

Tinctil is,is,e.*De teinture,*சாய, சாயத்துக்கான, சாயத்தோய்ப்பதற்குரிய:—virus அம்புக்குரியவிஷம். [ன்.

Tinctor,is,*m.Teinturier,* சாயக்கார

Tinctori us, a, um, *V.* Tinctilis:—mens இரத்தப்பிரியமுள்ளபுத்தி.

*Tinctio, nis, } *f.*—t us,ûs,*m.Tein-*
Tinctur a, æ, } *ture,*சாயம், நிறம்,வர்ணம்.‖சாயத்திருதல்,-திருத்தொழில்,-திரும்வித்தை.

Tinct us, a, um, *part. ex* tingo. ‖ *Teint,* சாயமுள்ள,-தோய்த்த,-பிடித்த. ‖*Trempé,* தோய்த்த.‖*Imbu,* உள்ள:—litteris கொஞ்சம்படிப்புள்ள,— sensu பலத்தஅர்த்தமுள்ள.

Tine a,æ,*f. Teigne,* பொட்டு, அரிபுழு, அரிக்கிறபூச்சி.‖*Ver,*புழு,பூச்சி.‖*Pou,* பேன்.

*Tine o,as,are,*v.n.Etre rongé par les vers,*பொட்டுகளால்-, புழுக்களால்அரிக்

Tineol a,æ,*f.Pou,*பேன்.[கப்படுதல்.

Tineos us, a, um. *Plein de teignes,* பொட்டு-,புழுநிறைந்த. [(*Maroc*) நகர்.

Tingi, *ind.* —g is, is, *f. Tanger,*

Tingitan a,æ,*f. Mauritanie tingitane,Maroc, (Afrique)* நாடு.

Tin go,gis,xi,ctum,gere,*v.a.Tremper,*தோய்த்தல், அலைத்தல், நனைத்தல். ‖ காய்ச்சித்தோய்த்தல், பதமிடுதல்:—membra pallade மேனிக்குஎண்ணெய்பூசுதல்,—in amne faces தண்ணீரில்தீபமவித்தல், —poculis இலாகிரியாகக்குடிப்பித்தல்,—æra lacu பித்தளைகாய்ச்சித்தண்ணீரிலேதோய்த்தல்.‖*Teindre,* சாயந்தோய்த்தல்,-தீர்தல்,-போடுதல்,-காய்ச்சுதல்,வருணம்-, வண்ணந்தீர்தல், நிறங்கொடுத்தல்:—sanguine இரத்தக்கறைப்படுத்துதல், —lumine விளக்குதல்,—sale libellos யுத்திப்பதிடியாற் புஸ்தகத்தைநிரப்புதல்.‖*V.*Baptizo. [காரி.

Tingomen a,æ,*f. Ivrognesse,* குடிக்

Tingui.*P.*Tingi.*Etre baptisé,* ஞானஸ்நானம்பெறுதல். [நதி.

Tini a,Tinn a,æ,*f. Topino, (Italie)*

Tini a,orum,*n.pl. V.*Tina. [ண்டி.

Tiniari a,æ,*f. Esp. de plante,* ஓர்பூ

Tinniment um,i, *n.Son aigu,* கிணீல், கிணீர், களகளப்பு,கிலுக்கு.

Tinn io,is,ii,itum,ire,*v.n. Tinter,* கலகலத்தல்,கிலுகிலுத்தல், கணீர்-, கலீரிடுதல்,கணீர்கணீர்என்னல். ‖*Sonner,* சத்தித்தல்,ஒலித்தல். ‖*Financer,* பணத்தருதல்,-வாங்குதல். ‖*V.*Tintinulo.

Tinnit o,as,are,*v.n.freq.ex* tinnio.

Tinnit us,ûs,*m.V.* Tinnimentum: — aurium காதிலாகிறகிலுக்கு. ‖ *Style ronflant,* சவறுஞ்சத்தமுள்ளவசனநடை

Tinnul us, a,um.*Au son clair,* தெளிந்தகிச்சுச்சத்தமுள்ள, கிணீரென்கிற: — orator இன்னிசையாய்ப்பிரசங்கிக்கத்தெரிகிறவன். [ராசாளி.

Tinnuncul us,i,*m. Crécerelle,* ஓரி

Tintinnabulat us, a,um. *Qui porte une clochette,* ஓர்சிறுமணியுள்ள,- தரிக்கிற. [*Clochette,*சிறு-,கைமணி.

Tintinnabul um,i,*n.*—n us, i, *m.*

Tintinnacul us, i, *m.Sonneur,*மணியடிக்கிறவன். ‖*Esclave fouetteur,*சவுக்கினாலடிக்கிறஅடிமை. [*n.V.*Tinnio.

Tintinn io,is,ire,—tin o, as,are,*v.*

Tintinul o,as,are, *v.n. Gazouiller,* (பக்ஷி) கீச்சிடுதல்,கத்துதல்,கிச்சுகிச்செனப்பாடுதல்.

Tinuncul us,i,*m.V.* Tinnunculus.

Tin us,i,*f. Esp.de laurier,* ஓர்விதம

Tinxi,*præt. ex* tingo. [காட்டுஅலரி.

Tiph e,es,*f.Esp.de riz,* கிறக்குதேசநெல்லு.

Tiphy s,os,*m. Tiphys* என்பவன்.

Tipul a,—ll a,æ,*f. Araignée d'eau,* நீர்ச்சிலந்தி. [ர்கோணங்கி.

Tiresi as,æ,*m.Tirésias* என்பவன்,ஓ

Tiro, nis, *m. Recrue,* புது-, பழகாதசேவகர்: — exercitus சண்டைஅறியாதபடை. ‖*Apprenti,*(வித்தை-,தொழில்)கற்றுக்கொள்ளுகிறவன், பழக்கம்-, அப்பியாசமில்லாதவன்:—in nullâ re சகலத்திலுந்தேர்ந்தவன். ‖ Tirones உடு-பிராயமடையாதவாலர், பக்குவபிராயத்தையடையாதவாலிபர்.

Tiroeini um,i, *n.* } *Recrues,* புதுச்
Tironat us,ûs, *m.* } சேவகர். ‖ *Apprentissage,*கற்றுக்கொள்ளல், தொழிலப்பியாசம்,வித்தியாரம்பம், பழகுதல்,பழகுங்-, பரிட்சைக்காலம்,- அத்தலை: — navis கப்பலின்முதல்யாத்திரை, —ponere,deponere பரிட்சைக்காலமுடித்தல்,-அத்தலைவிடுதல், tirocinii dies வாலிபர்நியாயதாத்தீரராக ஏற்கப்படும்நாள்,tirocinio labi அப்பியாசமில்லாமையாற்பிசகுதல்.

Tirol is,is,*f.Tyrol,*(*Autriche*) நாடு; Tirolens is,is,e.*Du Tyrol,*ஷை நாட்டு.

Tiruncul us,i,*m.* —l a,æ, *f. Jeune novice,*கற்றுக்கொள்ள-, பழகத்துவக்குகிறவன், பழக்கமில்லாதவன்,-வள்.

Tirynth us,i,*m.* —ryn s, tis,*f. Tirynthe,*(*Argolide*) நகர்; Tirynthi us, a,um. *De Tirynthe,* ஷைநகரத்து: — heros, *Hercule-, Fabius* என்பவன்,— aula, *Herculanum* என்னுநகர்.

Tis,*P.*tui,*gen.ex* tu.

Tisiphon e,es, *f. Tisiphone* என்பவள், ஓர்கோபதெய்வி; Tisiphone us,a, um.*De Tisiphone,* ஷை அவளுடைய.

Tiss e,es,*f. Tissa; Randazzo,* (*Sicile*) நகர்:Tissens es,ium,*m.pl. Ses habitans,*ஷைநகரத்தார்.

Titan,is,—n us,i,*m. Titan* என்பவன். ‖*Le soleil,* சூரியன்; Titan es,um, *m. pl.Titans* என்பவர்கள், ஷை அவன்குமாரர்; Titani a,æ,—ni s,dis,*f. Sa fille,* அவன்மகள்,- பேத்தி, *Latone, Diane, Pyrrha, Circé* என்பவர்கள். ‖ *La lune,* சந்திரன்; Titaniac us,—nic us,a,um. *De Titan* ஷை அவனது. ‖ *Des Titans,* ஷை அவர்களின். ‖*Du solcil,* சூரியனுடைய:—ales, *Phénix* என்னும்பக்ஷி.

Titaresi us, — s us, i, *m. Tirasco,* (*Thessalie*) நதி.

Tithon us,i,*m.Tithon* என்பவன்;Tithoni us,a, um. *De Tithon,* ஷை அவனது;Tithoni a,æ,—ni s,dis,*f.L'Aurore,* அருணோதயம், அவன்மகள். [ளோர்பூ.

Tithymal us,i,*f.Tithymale,* பாலுள்

Titia lex,*f.Loi Titia,* நடுவர்இலஞ்சம்வாங்குகிறதைவிலக்குங்கட்டளை.

Titiæ aves,*f.pl.Pigeons ramiers,*காட்டுப்புருக்கள், (அதுகளின்பறப்பு அஞ்ஞாணிகளுக்குச்சகுனமாம்.)

Titiensis tribus,*f. Tribu de Titius,* (*Rome*) சனவகுப்பு; Titi es, um, *m. pl. Ses membres,* ஷை வகுப்புச்சனங்கள்.

Titi i,orum,*m.pl.Esp. d'augures,*புருப்பறப்புச்சகுனிகள்.

Titillament um,i,*n.*—latio, nis,*f.*

—lat us, ûs,—l us, i, *m. Chatouillement*, கூச்சம், கைக்கூச்சம், அக்கின்பாய்ச்சுதல்.

Titill o...are, *v.a. Chatouiller*, கூசுவித்தல், கூச்சம்வருவித்தல், -காட்டுதல், அக்கின்பாய்ச்சுதல். ‖ *Emouvoir*, உருக்குதல். ‖ *Flatter*, இச்சகஞ்செய்தல். ‖ *Caresser*, கழுவுதல், சீராட்டுதல்.

Titio, nis, *m. Tison*, கொள்ளி, நீக்கொள்ளி, கொள்ளிக்கட்டை. [மையானகூத்து

Titi us, i, *m. Danse efféminée*, பெண்

Titiviliti um, — villiti um, i, *n. Bourre d'étoffe*, புடவைத்துத்து. ‖ *Fétu*, அரும்பு, திரணம். [மாறி, தத்தளிப்பாய்.

Titubanter, *adv. En chancelant*, தடு

Titubanti a, æ, *f.*—batio, nis, *f. Bégayement*, திக்கு, கொன்னை, திக்குதல். ‖ *Chancellement*, தத்தளிப்பு, தடுமாற்றம்.

Titub o...are, *v.n. Chanceler*, தத்தளித்தல், தடுமாறுதல், திகைத்தல், பேதவித்தல். ‖ *Bégayer*, திக்குதல், கொன்னுதல், கொன்னிக்கொன்னிப்பேசுதல்.

Titulat us, a, um. *Intitulé*, பேருள்ள.

Titul us, i, *m. Titre*, பேர், வக்கணை, வக்கணம், பட்ட-, மதிமைப்பேர்: ingredi per titulos மதிமைப்பெயரொல்லாம்விசாரித்துப்பார்த்தல், tituli cupido வெகுமானத்திருசை. ‖ *Inscription*, மேலெழுத்து, -விளாசம். ‖ *Affiche*, அறிக்கைப்பத்திரம். ‖ *Prétexte*, போக்கு, சாக்கு, நியாயம். ‖ *Signe*, குறி, அடையாளம்.

Tit us, i, *m. Tite* என்பவன்.

Tityr us, i, *m. Petit d'une brebis et d'un bouc*, வெள்ளாட்டுக்கிடாவுக்குஞ் செம்மறியாட்டுக்கும்பிறந்தகுட்டி. ‖ *Bélier*, செம்மறிக்கிடா, மந்தையின்பிரதானசெம்மறிக்கிடா. ‖ *Singe*, குரங்கு. ‖ *Chalumeau*, குழல். ‖ *V.* Sacrifex, Satyrus. ‖ *Tityre* என்பவன், கெட்டபுலவன்.

Tity us, i, *m. Tityus* என்பவன். [ர்.

Ti um, i, *n. Tium*, (*Paphlagonie*) நக

TM

Tmari us, i, *m. Jupiter* என்பவன்.

Tmar us, i, *m. Tmare*, (*Thesprotie*) மலை; Tmari us, a, um. *Du Tmare*, மலையின்.

Tmes is, is, *f. Division*, பிரிவு, பிரிவினை, வகுப்பு, கீறு. ‖ *Tmèse*, சேர்க்கைச்சொல்லைப்பிரிக்குமணி: உம். Quid judicium cumque, *P.* Quidcumque judicium.

Tmol us, i, *m. Tmolus*, (*Lydie*) மலை, நதி; Tmoli us, a, um, *Du Tmolus*, மலையின்; Tmolit es, æ, *m. Vin du Tmolus*, மலையிரசம்.

TO

Tobi as, æ, *m. Tobie* என்பவன்.

Tobale a, æ, *f. Nappe d'autel*, பீடத்துச்சீலை, -புடவை. [ல்லுக்கல்.

Toc a, æ, *f. Borne de champ*, வயல் எ

Toc os, i, *m. Usure*, வட்டி.

Tocullio, nis, *m. V.* Fenerator.

Todillu s, a, um, *V.* Gracilis.

Tœcharch us, i, *m. Chef de chiourme*, கப்பலில்தண்டுவலிக்கிறவர்களின்தலைவன்

Tof us, i, *m. Tuf*, முருகை, கடினமல்லாத வெள்ளைக்கல்; Toface us,— fatius,—fici us,—fin us,— fos us, a, um. *De tuf*, முகல்லின், -கல்போன்ற.

Tog a, æ, *f. Toge, robe* (உரோமையர்.) அங்கி, நெடுஞ்சட்டை, சமாதானகாலச்சட்டை. ‖ *Gens de robe*, நடுவர், நியாயவாதிகள்முதலியநீதிநிலைத்தார். ‖ *Paix*, சமாதானம்: togæ சமாதானகாலத்தில், in togâ versari ஆளுகைக்காரியங்களில் தலைதல், -அலுவலாயிருத்தல். ‖ *Courtisane*, வேசி. ‖ *Cortége*, பரிவாரம். ‖ *Jeunesse*, வாலிபம். ‖ *V.* Cliens.

Togatari us, i, *m. Auteur, acteur de pièces romaines*, உரோமையனைக்காட்டும்நாடகமுண்டாக்கினவன், -ஆடுகிறவன்.

Togatul us, a, um. *Pauvre*, எளிய. ‖ *dim. ex*

Togat us, a, um. *Vêtu d'une toge*, அங்கியுள்ள, -தரிக்கிற. ‖ *Civil*, குடிகளின், நகரத்தாரின். ‖ *De la paix*, சமாதானத்து: togatus, மத்திமஆஸ்தியுள்ளவன், togata, வேசி,— gens உரோமையர், — militia நடுவர்முதலிய உத்தியோகஸ்தர், —opera பரிவாரக்கடமை,— fabulæ உரோமையனைக்காட்டும்நாடகங்கள்.

Togison us, i, *m. Bachiglioné*, (*Lombardie*) நதி.

Togul a, æ, *f. dim. ex* toga.

Tolbiac um, i, *n. Tolbiac, Zulch*, (*Allemagne*) நகர்.

Tolc a, æ, *f. Toucque*, (*France*) ஆறு.

Tolentin um, i, *n. Tolentino*, (*Italie*) நகர்; Tolentin us, a, um. *De Tolentino*, மேநகரத்து.

Tolerabil is, is, e, *V.* Portabilis. ‖

Complaisant,இளக்காரம்-,தாகூடினை-, உபேகூடியுள்ள

Tolerabiliter,*adv. V.* Commodulè.

Toleranter,*adv. V.* Patienter.

Toleranti a, æ,— ratio, nis, *f.*— rat us,ûs,*m. Patience*, பொறுமை,பொறுதி.‖*Tolérance*,சகிப்பு, தாளுதல், பொறுத்தல்,இளக்காரம்.

Toler o...are,*v.a. Souffrir*,படுதல்,சகித்தல், அநுபவித்தல்.‖*Tolérer*,பொறுத்தல்,ஒட்டுதல்,தாளுதல், இளக்காரம்-, உத்தரவுகொடுத்தல்.‖*Porter*, தாங்குதல்,சுமத்தல்.‖*Entretenir*, காப்பாற்றுதல்,வளர்த்தல்:—vitam colo தான்நாம்பிறஞ்சீவனம்பண்ணுதல்.‖*Soulager*,ஆற்றுதல்,உதவிசெய்தல்.

Tol es,ium,*f.pl. V.* Tonsillæ.

Tolet um,i,*n. Tolède*, (*Espagne*)நகர்; Toletan us, a,um. *De Tolède*, ஷெநகரத்து. [*ens*,(*Galatie*) சனம்.

Tolistobi i,orum, *m.pl. Tolistobi-*

Tolleno,nis,*m. V.* Ergata.‖*Picote*... ஏற்றம்,ஏற்றமரம், தண்ணீர்மொள்ளும்எந்திரம்.‖*Bascule*, உஞ்சல், ஊசலாட்டம்,தூக்கித்தாழவிடும் எத்தனம். [fero.

Toll erunt,isse,*P.* Tul erunt,isse,*ex*

Tollio,nis,*m. Qui tire de l'eau*, இணற்றுத்தண்ணீர் மொள்ளுகிறவன்.

Toll o,is,(sustuli,sublatum),ere,*v. a. V.* Sustollo.‖*Lever*, எடுத்தல், கைதூக்குதல்.‖*Elever*,எழுப்புதல், தூக்குதல்.‖ வளர்த்தல்: —clamorem கூவுதல்,—animos ஆங்காரித்தல்,—animos alicui ஒருவனைத்தைரியப்படுத்துதல்,—se humo பேர்பெறுதல்,உயருதல்.‖*Oter*, நீக்குதல்,போக்குதல்:—dolorem, நோவுபரிகரித்தல், —inducias சண்டைநிறுப்புமுறித்தல்.‖*Détruire*, இடைத்தல், இடித்தல்.‖*Raturer*,கிறுக்குதல், துடைத்தல்.‖*Prolonger*, தாமதப்படுத்துதல், இழுத்தல், நீளிப்பித்தல்.‖*Emmener*, கூட்டிக்கொண்டுபோதல்.

Tollo,nis,—lon us,i,*m. V.* Tolleno.

Tolos a,æ,*f. Toulouse*, (*France*) நகர்; Tolosa s,tis,*m. f.*—san us,a,um,—sens is,is,e. *De Toulouse*,ஷெநகரத்து.

*Tolutar is,—til is, is, e,— tari us, a,um. *D'amble*, வல்லிதத்து, வல்லிதமாய்-, வேகமாய்நடக்கிற.

Tolutiloquenti a, æ,*f. Volubilité de langue*,நாவின்சுறுக்கு,-படபடப்பு.

Tolutim,*adv. A l'amble*, வல்லிதமாய்.

Tomacell a,—cin a,æ,*f.*— cul um, —cl um,i,*n. Saucisse*, துண்டித்தபன்றியிறைச்சிநிறைத்தகுடர். [நிலேயசை.

Tom e,es,*f. Césure*, கவியில்தங்கல்,-

Toment um,i,*n. Bourre*,துத்து, நிரப்பு,கிம்பா,மயிர்:—circense வையாளிவீதியின்ஏழைப்படுக்கை,கோரைமெத்தை.

Tomentiti us, a, um. *De bourre*,துத்தின்,கிம்பாவின்.

Tom i,orum,*m.pl. Tomes, Tomisvar*, (*Turquie*) நகர்; Tomit æ, arum, *m.pl. Ses habitans*,ஷெநகரத்தார்; Tomitan us,a,um. *De Tomes*, ஷெநகரத்து. [*vant*,முன்பல்லுகள்.

Tomicident es, *m. pl. Dents de de-*

Tom ex, } icis, *f. Corde de chanvre*,

Tom ix, } *de jonc*, சணற்-, நாணற்கயிறு.

Tom us,i,*m. Tome*, புஸ்தகம். [யிறு.

Tonan s,tis, *part. ex* tono. ‖ *Maître du tonnerre*, இடிவீசுகிறவன்.‖ *Jupiter* என்பவன்:— falciger,*Saturne* என்பவன். [கச்சருகியிடுஞ்சிக்கற்குழல்.

Tonari um,i,*n. Esp. de sifflet*, இரா

Tonatio,nis,*f. Bruit du tonnerre*, இடிமுழக்கம்.

Ton deo,des,(totondi),sum,dere,*v. a. V.* Detondeo:—caput ad cutem தலையைச்சிரைத்தல், — aliquem auro ஒருவனுடையபொன் பறித்தல்.‖ *Moissonner*, வெள்ளாண்மைஅறுத்தல். ‖ *Faucher*, புல்வெட்டுதல்.‖ *Elaguer*, மிஞ்சினகிளைநறுக்குதல்,-கழித்தல்.

Tonesc o,is,ere,*v.n. V.* Tono.

*Tongitio,nis,*f. Connaissanee*, அறிவு.

*Tong o,is,ere,*v.a. Connaître*, அறிதல். [*listes*,கல்லெறியுமியந்திரக்கயிறுகள்.

Ton i,orum, *m.pl. Cordages de ba-*

Tonitral is,is,e. *Où se forme le tonnerre*,இடியுண்டாகிற.

Tonitru,*n. ind.*—tru a,um,*n. pl.*— tr us,ûs,*m.*—tru um,i,*n. Tonnerre*,இடி,இடிமுழக்கம், குமுறல், மேகத்தொனி.‖ முழக்கம்,பேரொலி. [கிற.

Tonitrual is,is, e. *Tonnant*, குமுறு

Ton o,as,ui, itum, are, Ton o, is, ere, *v.n. et a. Tonner*,இடித்தல், குமுறுதல்.‖முழங்குதல், இரைதல், பேரொலியிடுதல், வெகுசத்தஞ்செய்தல்: —ore இடிமுழக்கமாகக்கூவுதல், —laudes மிகவும்புகழ்ச்சியைப்பாராட்டுதல்.

Tonor,is, *m.Accent*, ஓசை.

Tons æ, arum, *f.pl. Rames*, தண்டிகன். ‖ *Plat de la rame*, தண்டின் தட்டையானபக்கம். [க-, நறுக்கப்படுகிற.

Tonsil is,is,e. *Qu'on tond*, கத்தரிக்

Tonsill a,æ,*f.Pieu d'amarre*, அமர்க்கயிறுகட்டிருப்புதூணியுள்ளது.

Tonsill æ,arum,*f.pl. V.* Amygdalæ. ‖ *Inflammation des amygdales*, கூகைக்கட்டின்எரிவு,-ஏக்கம்.

Tonsio,nis,*f.Tonte*, கத்தரிக்கை, ஆட்டுமயிர்கத்தரித்தல்.

Tonsit o...are,*v.a. freq.ex* tondeo.

Tons o,as,are, *v. a. freq. ex* tondeo. ‖ *Tondre*, மயிரைக்கத்தரித்தல்.

Tonsor, is,*m.Barbier*, அம்பட்டன், சவரகன், தாவிதன். ‖ *Elaqueur*, மரக்கினைதறுக்குவோன்.

Tonsori um,i,*n.* } *Boutique de bar-*
Tonstrin a,æ, *f.* } *bier*, அம்பட்டன் கடை,-வீடு. [பட்டனுடைய.

Tonsori us,a,um. *De barbier*, அம்

Tonstricul a,æ,*f.dim.ex* [கி.

Tonstri x,cis,*f.Barbière*, அம்பட்டச்

Tonsur a,æ,*f.*—s us,ûs,*m. Act.de tondre*, மயிர்க்கத்தரிப்பு. ‖—*de raser*, கிராப்பு. ‖ *Tonsure*, (தேவலூழியர்) முதற்பட்டம், பட்டம், தலையிற்சிறைத்தமுடி. ‖ *V.* Interlucatio.

Tons us,a,um,*part. ex* tondeo: —puer மூடருனஅடிமை, —reus குற்றஞ்சாட்டப்பட்டுவிடுதலையானவன். ‖ *Sans arbres*, மரமற்ற.

Tons us,i,*m.Tanja*,(*Thrace*) நதி.

Tonui,*præt.ex* tono. [இடிமுழக்கம்.

Ton um,i,*n.Tonnerre*, (*நாடகத்து*)

Ton us,i,*m.Ton*, ஓசை,சுருதி,சுரம்,ஓசை, தொனி. ‖ *Lustre*, காந்தி, மினுக்குவன்னம். [பதி, நாடாள்பவன்.

Toparch a,æ,*m.Toparque*, தேசாதி

Toparchi a,æ,*f.Toparchie*, நாடாளுகை, ஆளுகிறநாடு.

Topazi um,i,*n.*—zi us,i,*m.Topasé*, புருடராகம், புட்பராகம்.

Topaz os,—z us, i, *m. Zémorgète*, (*mer Rouge*) தீவு.

*Toper, *adv. Vite*, சீக்கிரமாய்.

Tophace us, a,um, *V.* Tofaceus.

Topi a,orum, *n.pl.Paysage*, தேசத்தோற்றம். ‖ *Forme donnée aux arbres en les taillant*, மரங்களுக்கு நறுக்கியிடும்வடிவு; Topiari a,æ,*f.Art. de tailler ainsi*, பலவடிவாக மரங்களை நறுக்குந்தொழில், -வித்தை; Topiari us,a,um. *De cet art*, வேவித்தையின்; Topiari-us,i,*m. Jardinier qui taille ainsi*, வேவித்தையுள்ள தோட்டக்காரன்; Topiari um,i,*n.Arbre taillé ainsi*, பலவடிவாக நறுக்கப்பட்டமரம்.

Topic a,orum,*n.pl.Topiques*, மேலைபோமருத்து. ‖ *Lieux communs*, வாசகசாலைதிரப்பொதுவிடங்கள்.

Topic e,es,*f.Topiques*, வேபொதுவிடவிளக்கம்,-விளக்கமாகிய தருக்கசாலைதிரப்பங்கு.

Topic us,a,um, *V.* Localis. ‖ *Des topiques*, பொதுவிடங்களின், -விடவிளக்கத்து. [லவிபரம்,-வருணிப்பு,-வளம்.

Topographi a,æ,*f.Topographie*, ஸ்த

Topograph us,i,*m.Topographe*, ஸ்தலம்வருணிக்கிறவன். [தலப்பணிக்கு.

Topothesi a,æ,*f.Plan d'un lieu*, ஸ

*Topper, *V.* Toper.

Toral,—l e,is,*n.V.* Lodix. ‖ *Couverture de table*, மேசைச்சீலை.

Torcular,—r e,is, — ri um, i, *n. Pressoir*, ஆலை, திராட்சவாலை.

Torculari us,i,*m.Pressureur*, ஆலையாட்டுகிறவன்.

Torculari us, } a,um. *De pressoir*,
Torcul us, } ஆலையின்.

